பாதுகாவலன்

PATHUKAVALAN

பாதுகாவலன்
தனிப்பிரதி ரூபா 1-50
தபால் மூலம் தனிப்பிரதி ஆண்டு சந்தா ரூபா 100/-
தினமும் வாசகர்கள் பெருகிக்கொண்டு இருக்கிறார்கள். இன்னமும் முன்னேற இடமுண்டு. எனவே வாசகர்களை ஊக்குவியுங்கள். பிரதிகளைக் கூட்டவோ குறைக்கவோ விரும்பின் அறியத்தாருங்கள் உடனே அமுலாக்குவோம்.
அ. பெ. இல. 2,
யாழ்ப்பாணம்

ED
6-14
Division
Library

மலர்: 115 இதழ் : 23 | 9-6-1989 | (யூன் 9 — யூன் 16) | ரூபா 1-50 | இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

யூன் 10ஆம் திகதிவரை, நோர்வே, ஐஸ்லாந்து, டென்மார்க், பின்லாந்து, சுவீடனுக்கு திருத்தந்தையின் 10நாள் விஜயம்:

# உலகின் அதிசெல்வந்த நாடுகளுக்கு திருத்தந்தையின் முதலாவது விஜயம்

**திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் 42வது அப்போஸ்தலிக்க பயணம் இம்மாதம் 1ஆம் திகதி ஆரம்பமானது. ஸ்கண்டிநேவிய நாடுகளில் ஒரு வீதத்துக்கும் குறைந்த கத்தோலிக்கரே வாழ்கின்றனர். 93 வீதம் லூத்தரன் கிறிஸ்தவர்கள் வாழும் இந்நாடுகளில் செல்வப்பெருக்கு ஆன்மீக வாழ்வைப் பாதித்திருப்பதை திருத்தந்தை சுட்டிக்காட்டியுள்ளார்.**

லூத்தரன் திருச்சபைக் கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஸ்கன்டிநேவிய நாடுகளுக்கு பத்துநாள் பயணத்தை மேற்கொண்டுள்ள திருத்தந்தை கிறிஸ்தவர்களிடையே ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளார்.

நோர்வே புரொட்டடஸ்தாந்து ஆயர்கள் பதினொருவரில் எழுவர் தாம் திருத்தந்தையுடன் நடத்தப்படும் பொதுவழிபாடுகளில் பங்குகொள்ளமாட்டோம் என்றும் டென்மார்க்கிலுள்ள ஆயர்கள் பொது வழிபாட்டின்போது திருத்தந்தை உரையாற்றக் கூடாது என்றும்கூறியுள்ளனர்.


ஐஸ்லாந்திலுள்ள 25லட்சம் மக்களில் 93% லூத்தரன் திருச்சபையைச் சேர்ந்தவர்கள். பெரும்பாலான மக்கள் கிறிஸ்தவ சமயத்தைக் கைவிட்டவர்களாகவே வாழ்கின்றனர்.

ஐஸ்லாந்து ஜனாதிபதி, பிரதமர், லூத்தரன் திருச்சபைத் தலைவர்கள் பங்குபற்றிய வழிபாட்டில் கடும் குளிரின் மத்தியில் 4000 மக்கள் பங்குபற்றிய போது கிறிஸ்தவ ஒற்றுமையின் அவசியம்பற்றி திருத்தந்தை உரையாற்றினார்.


(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## யாழ். மறைவட்டத்திற்கு ஆறு புதிய குருக்கள்

யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் தமது மெய்யியல், இறையியல் கல்வியைமேற்கொண்ட ஆறு அருள் சகோதரர்கள் இம்மாதம் 19ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயர் பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் குருக்களாகத் திருநிலைப் படுத்தப் படுவார்கள். சென்ற ஆண்டு தனது முதற் கனியாக ஐந்து குருக்களை உருவாக்கிய குருமடம் இவ்வாண்டு பதினொரு புதிய குருக்களை பயிற்றுவித்த பெருமையைப் பெறுகிறது.




சகோ. யோ. அன்ரனி



சகோ. அ. பெ. பெனற்



சகோ. இயூஜின் பிரான்சிஸ்



சகோ. கு. யே. அன்ரனி பாலா



சகோ. து. அ. தவருஜசிங்கம்



சகோ. மனுவற்பிள்ளை டேவிட்

(1) சகோ. யோ. அன்ரனி (தாசன்)

மண்டைதீவைச்சேர்ந்த திரு. மடுத்தீன் யோண்பிள்ளைக்கும், திருமதி. சாமிநாதர் பிலோமினம்மாவுக்கும் தலைமகனாக 29-4-1958 ல் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை மண்டைதீவு புனித பேதுருவானவர் றோ. க. பாடசாலையிலும் யாழ். சாள்ஸ் வித்தியாலயத்திலும் கற்றார். பின்னர் தொடர்ந்து வேலணை மத்திய கல்லூரியில் படிப்பை

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## தாய்வானுக்கான பயணம்

திருத்தந்தையின் தாய்வானுக்கான பயணம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் ஆசியாவுக்கான திருத்தந்தையின் பயணம் ஒக்ரோபரில் நடைபெறும்போது தாய்வானுக்கும் அவர் விஜயத்தை மேற்கொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

50 லட்சம் தொழிலாளருடன் நின்று அவர்களுக்காகப் போராடும் திருச்சபையின் பணியாளர் இருவர் அயர்லாந்துக்கு நீல் மிகில், ஸ்பானிய யேசுசபைக்குரு ஜோஸ் எல்லக்கூரியா ஆகியோரின் நாடுகடத்தல் பிரச்சனை திருத்தந்தையின் விஜயம் ரத்துச் செய்யப்படக்காரணமாகலாம் என நம்பப்படுகின்றது.

## மறைப்பணிக்கான பங்குக்குழு

உரும்பிராய் பங்கின் ஆன்மீக லௌகீக தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மக்களை நெறிப்படுத்தவுமென, பங்குச் சபை, மாதா கூட்டம், மரியாயின் சேனை, பாடகர் குழாம், மறையாசிரியர் மன்றம், பீடப் பணியாளர் மன்றம், பொது நிலையினர்குழு, திருப்பாலத்துவ சபைக்குழு ஆகியவற்றிலிருந்து ஒவ்வொன்றிலும் தலா இருவர் வீதம் தெரிவுசெய்யப்பட்டு ஒரு பங்குக்குழு (Parish team) உருவாக்கப்பட்டது. பங்குக்குழுவின் முதலாவது கூட்டம் மே 21 இல் கூட்டப்பட்டது. இக்குழுவின் தலைவராக திருமதி ஜீ. குணரட்ணமும் செயலாளராக செல்வி ரீ. மெற்றில்டாவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆலய சம்பந்தமான நிகழ்வுகளில் பெற்றோர் இளைஞர்களின் பங்களிப்பு, வழிபாடுகளில் மக்களின் பங்களிப்புக்கள் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன. பங்கின் மறைப்பணிகளுக்கு இம்மன்றமே பொறுப்பாக இருக்கும். பங்குத்தந்தை இதனை வழிநடத்துவார்.

## பைபிள் 160 மொழிகளில்

இந்தியாவிலுள்ள 1652 இந்திய மொழிகளில் இதுவரை 160 இந்திய மொழிகளில் வேதாகமத்தின் பகுதிகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாக திருத்தந்தையின் வேதாகம பரப்புதல் சங்கம் கணிப்பிட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள 1652 மொழிகளில் 370 மொழிகள் மட்டுமே ஐயாயிரத்துக்குமதிகமான மக்களால் பேசப்படும் மொழிகளாகும். இதில் 39 மொழிகளில் மட்டுமே முழு பைபிளும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம் கருத்து

### ஜூன் வணக்க மாதம்

'மரியாளின் மாதத்தில் அஸ்தமித்துள்ள கதிரவன் யேசுவின் திரு இருதயத்தின் மாதத்தில் உதித்துள்ளான்' என இலங்கைக் கத். ஆயர் மன்றத்தலைவரும், கொழும்பு மறை மாவட்டப் பேராயருமாகிய பேரருள்திரு. நீக்கிலஸ் மாக்கஸ் பெர்ணண்டோ ஆண்டகை தம் குருக்களுக்கு எழுதிய மடலில் குறிப்பிட்டுள்ளார்

ஜூன் மாதம் யேசுவின் திரு இருதயத்தின் மாதம். வைகாசி வணக்க மாதம் பல பங்குக் கோவில்களில் நடைபெறுவது போல திரு இருதயச் சபைகள் உள்ள கோவில்களில் ஆனி மாதத்தில் திரு இருதய பக்தி வளர்க்கப்படுகின்றது. சில்லாலைப் பங்கு இதற்கு ஓர் உதாரணம்.

பேராயர் தம் மடலில் திருமணி ஆராதனை, முதல் வெள்ளித் திருப்பலி, திரு இருதயப் பக்தி என்பவற்றை ஊக்குவிக்கும்படி தம் குருக்களை கேட்டுள்ளார்.

ஜூன் மாதத்தில் ஆரம்பித்து, பங்கிலுள்ள எல்லாக் குடும்பங்களிலும் யேசுவின் திரு இருதயத்தை ஸ்தாபிக்கும் வரை தயக்கப்படாமல் இந்த முயற்சியில் ஈடுபடும்படி கேட்டுக் கொண்டுள்ளார். ஒவ்வொரு குடும்பமும் யேசுவின் திரு இருதயத்தின் திரு உருவமோ, படமோ வைத்து தமது இல்லத்தில் அதனை ஸ்தாபிக்க வேண்டும். புனித மார்க்கரித் மரியம்மாளுக்கு முன்னூறு ஆண்டுகளுக்குமுன் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தலின் பயனாகவே திருச்சபை இந்த பக்திமுயற்சியில் ஈடுபட்டு வருகின்றது என்று பேராயர் சுட்டிக் காட்டியுள்ளார்

புனிதர்களின் வடிவத்தைப் படத்திலோ திரு உருவத்திலோ வடித்து, அவற்றை ஊனக்கண்களினால் நோக்கும்போது அவர்களின் செயல்களையும், புனிதத்தையும் தியானிக்கும் சந்தர்ப்பம் உருவாக்கப்படுகிறது. யேசுவின் திரு இருதயத்தை வழிபட படத்தையோ, திரு இருதய உருவத்தையோ தெரிந்தெடுத்து இல்லங்களில் திரு இருதய அரசை ஸ்தாபித்து, இயேசுவின் இருதயம் வெளிப்படுத்தும் இறை அன்பையும் இரக்கத்தையும் கண்டுகொள்ள கத்தோலிக்க குடும்பங்கள் முயல வேண்டும்.

இன்று திரு இருதய ஸ்தாபகம் மங்கிப்போய் இருப்பதைப் பலரும் ஏற்றுக் கொள்வார்கள். குருவானவரை இல்லத்துக்கு அழைத்து திரு இருதயத்தை ஸ்தாபிப்பதும் வசதி கிடைக்கும்போது முடிந்தால் ஆண்டுக்கு ஒரு முறை அதனைப் புதுப்பிப்பதும் சிறந்த ஒரு வழக்கமாகும்.

குருக்களுக்கு நேரமில்லை, வசதி இல்லை என்று காரணம் கூறி, குடும்பத் தலைவர்கள் அதில் அசட்டையாயிராது, இப்பணி குருக்கள் விரும்பி வரவேற்கக் கூடிய ஒன்று என்பதனை உணர்ந்து, தயங்காது குருக்களை அணுகி, தமது தேவைகளை நிறைவாக்கிக்கொள்ள வேண்டும்.

குருக்களும் கத்தோலிக்க குடும்பங்களை ஆண்டுக்கு ஒரு முறையாவது அவர்களது இல்லங்களில் சென்று தரிசிக்க அரிய சந்தர்ப்பமாக அமையும் இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்த முயல வேண்டும்.

புது வாழ்வு, பரிசுத்த ஆவி வழிபாடு நம்மை இயேசுவிலிருந்து பிரிக்காதிருக்கட்டும். இயேசுவின் அன்பையும், இரக்கத்தையும் வெளிக்காட்டும் திரு இருதயப் பக்தி முயற்சியைப் புறம்பாக்கிய புதுவாழ்வு முயற்சிகள் கிறிஸ்துவுக்கே புறம்பானவை என்பதை இனங்கண்டு கொள்வோம்.

இவ்வாண்டு புதிதாக இலங்கை ஆயர் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராயரின் அழைப்பு தமது மறை மாவட்டக் குருக்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பே. ஆனாலும் அகில இலங்கைத் திருச்சபைக்கும் பொருந்தும் ஓர் அழைப்பு. செவிசாய்ப்போம். செயல்படுவோம்,

## தேனருவி

### ஆண்டின் 11ஆம் ஞாயிறு (18-06-89)

### சாக்கடை சந்தனமாகிறது!

கலைஞன் லியனடோ டா வின்சி 'ஆண்டவரின் இராவுணவு' என்னும் அழகான ஓவியத்தை வரைந்தவர். உரோமாபுரியிலுள்ள ஆலயம் ஒன்றின் பாடகர் குழாமில் அங்கம் வகித்த இளைஞன் பாண்டி நெல்லியின் ஒளிவீசும் முகம், இயேசுவின் வதனத்தை ஒத்திருந்தது. அதனால் அவ்விளைஞனை அழைத்துச் சென்று இயேசுவின் முகத்தை அழகொடு வரைந்தார் அந்த கலைஞர். இவ்வாறு ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் பொருத்தமான முகச்சாயலைத் தேடி அலைந்த டாவின்சி ஒவ்வொரு சாயலையும் கண்டுபிடித்து வரையப் பல வருடங்கள் கழிந்தன, இறுதியாக, யூதாஸ் கரியோத்தின முகத்தை ஒத்த — இருண்ட, விகாரமுடைய ஒரு மனிதனைத் தேடியவர் சந்தையில் நின்ற ஒரு இளைஞனைப் பொருத்தம் எனக் கண்டு யூதாசாக வரைந்த பின்பு அவனைப் பற்றி சற்று விசாரித்தார். அவன் வேறு யாருமல்ல, இயேசுவின் முகத்திற்கு தோற்றம் கொடுத்த பாண்டி நெல்லி என்ற இளைஞன் தான்.

முன்பு இயேசுவின் ஒளிவீசும் முகத்தை ஒத்தவன் பின்பு யூதாசின் இருள்படிந்த முகத்தைக் கொண்டிருந்தான். அதற்குக் காரணம், அவன் பாவ வாழ்வு. பாவமும், புனிதமும் ஒரே மனிதனின் இரு முகங்கள். பாவத்தில் தேய்பிறையாகவும், புனிதத்தில் வளர்பிறையாகவும் மாற்றம் பெறுதல் தான் உண்மையான வளர்ச்சி. சந்தனம் சாக்கடையாகக் கூடாது என்பதுதான் இறைதிட்டம். மனிதன் பலவீனமானவன் தான், ஆனாலும் அவன் தன் இயல்பை ஏற்றுக் கொள்ளும் போது அவன் புனிதமடைய வழி பிறக்கிறது. அன்றேல்! தன் பாவங்களை நியாயப்படுத்துவதோடு, தன்னைப் பற்றித் தவறான எடைபோட்டு தவற்றிலேயே மடிய நேரிடும்.

தாவீது மன்னன் இறைவாக்கினர் நாத்தான் வாயிலாக தன் பாவவாழ்வின் கொடுமையை உணர்ந்தார். தவறிவிட்டதால் அழிவுதான் என்பதுமில்லை. ஏனெனில் பட்ட மரத்திலும் தளிர்கள் முளைக்கச் செய்யக் கூடியவர் இறைவன். எம் தாழ்நிலையை உணர வேண்டியதுதான். மிகுதி இறைவனுடைய செயல். இரண்டாம் வாசகம் கூறுவது போன்று புனித சின்னப்பர் பரிசேயப் பாரம்பரியத்திற்குத் தன்னைப் பறி கொடுத்து சட்டம் என்ற கோட்டைக்குள் தான் பத்திரமாய் இருப்பதாக மனப்பால் குடித்தார்.

பகட்டில் மோகம் கொள்வதால் இறைவனின் முன்னிலையில் தான் பாவி என்று உணர்ந்தார். சின்னப்பர் தன்னை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த 'பரிசேயனை' சாகடித்து இயேசுவை ஆடையாக அணிந்து கிறிஸ்து மயமானார்.

நற்செய்தியில் பாவிப்பெண் இயேசு என்ற 'புனித கங்கையில்' குளிக்க விரும்பினாள். தன் அழகும், ஆடம்பரமும், பகட்டும், சதைப் பிடிப்பும் தனது அகத்தை விகாரப்படுத்தி அசிங்கமாக்குவதை உணர்ந்தாள். கண்ணீரில் குளித்து புனிதமடையவும் நறுமணம் கமழும் புதுப்படைப்பாக மாறவும் விரும்பினாள்.

இயேசுவின் பாதத்தை கண்ணீரால் கழுவி, கூந்தலால் துடைத்து, பரிமளதைலம் பூசி முத்தமிட்டு இயேசுவை அன்பு செய்தாள். எவ்வளவு வேகத்தில் இறையன்பில் பற்றி எரிந்தாளோ அவ்வளவு வேகத்தில் அவளது உள்ளமும் புடமிடப்பட்டது.

திருச்சபையில் தண்ணீரும் உண்டு, கண்ணீரும் உண்டு என்கிறார் புனித அம்புரோஸ். தண்ணீர் திருமுழுக்கையும், கண்ணீர் ஒப்புரவையும் குறிக்கின்றன.

அருட்சாதனங்கள் ஒவ்வொன்றும் எம் சாக்கடைத் துர்நாற்றத்தை அகற்றி நறுமணம் கமழும் சந்தன வாடை வீசச் செய்யும் அரிய கட்டங்களாகும். அருட்சாதனங்களை அலட்சியப்படுத்தி சாட்டுக்கூற விரும்புவோர் — உண்மையிலே தங்கள் குற்றங்களை மூடி மறைத்து வீணே விமர்சனம் செய்யும் பரிசேயக் கூட்டத்தைச் சார்ந்தவராவர்.

உண்மையில் பாவிகளின் கூட்டம்தான் திருச்சபை. பாவத்தால் விகாரப்படுத்தப்பட்ட முகத்தை மீண்டும் ஒளி வீசும் முகமாக்க மனமாற்றம் பெறும் மார்க்கம்தான் கிறீஸ்தவம். ஒவ்வொருவர் முகமும் கிறீஸ்துவை ஒத்ததாகவோ பாவியை ஒத்ததாகவோ மாறலாம். அருட்சாதன நீரூற்றுக்களை எம் அகங்களுடாக ஓடவைப்பதனூடாக புத்துணர்வும், புதுப்பொலிவும் கொண்டு தூய்மையின் சந்தனவாசம் எம்மில் வீசட்டும்.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

சாமு. 12; 7-10, 13 ஆண்டவர் உம்மை மன்னிப்பார்.
கலா: 2: 16, 19-21 என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே.
லூக். 7: 36-8: 3 மன்னிக்கப்பட்டார் என்பதற்கு அன்பு சான்று.

## கலைநிலா

### "இசைத்தென்றல்" ம, யேசுதாஸ்

செவ்வி கண்டவர்: டேமியன் சூரி



இசையமைப்பாளன் ஜேசுதாஸ் அவர்களை அறியாதவர்கள் ஈழத்தமிழ் மண்ணில் யாருமிலர். இன்று கத்தோலிக்க இசைவானில் சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கும் சிறந்த கலைஞன் மறை ஆசிரியரான இவர் சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர், புகுந்த வீடு ஆனைக்கோட்டை. அண்மையில் திருமறைக்கலாமன்றம் நடத்திய "தேம்பாவணிவிழா" வின்போது யாழ். ஆயர் அவர்களால் "இசைத்தென்றல்" என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. அவரது இசையமைப்பில் உருவான பாடல்களில் பாராட்டுப் பெற்றவை பல. அத்தகைய சிறப்புடைய இசையமைப்பாளனின் இசை ஞான அனுபவங்களை வெளிக்கொணரும் நோக்கத்துடன் கடந்த 4-6-89 ஞாயிறு பிற்பகல் அவரை நேரில் சந்தித்தேன். அவருடனான செவ்வி :-

கேள்வி:- தங்களுக்கு அண்மையில் "இசைத்தென்றல்" பட்டம் வழங்கப்பட்டது' எனது வாழ்த்துக்கள். இது சம்பந்தமாக தங்களது கருத்து என்ன?

பதில்:- ஒரு கலைஞன் அவன் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்படுதல் வேண்டும். அவனது ஆற்றல் போற்றப்படுதல் வேண்டும். அந்த வகையில் திருமறைக்கலாமன்றம்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20-ம் நூற்றுண்டின் தலைசிறந்த பொதுநிலையினர்

## (பிராங்க் டவ் நூற்றுண்டு நிறைவு 7-6-1889 — 7-6-1989)

வரலாற்றை நோக்கின் திருச்சபை வாழ்வில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய பொதுநிலைக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணக்கூடியதே எனலாம். சாதாரண மக்கள் ஏனைய துறைகளில் அதியுன்னத முன்னேற்றம் பெற்று விளங்கும் 20-ம் நூற்றுண்டிலேயே நாம் காணும் நிலை இதுதான். ஆகவே வரலாற்றில் இடம்பெறத்தக்க முக்கியத்துவம் பெற்று விளங்கும். பொதுநிலையினர் இன்றைய மக்களுக்குழர் கலங்கரை விளக்கமாகத் துலங்குகின்றனர்.

இத்தகைய ஒரு துருவ நட்சத்திரம் தான் மரியாயின் சேனையின் ஸ்தாபகரான பிராங்க் டவ். இப்பெரியாரது பிறப்பின் நூறாவது ஆண்டு நிறைவு உலகெங்கிலுமுள்ள மரியாயின் சேனையாரால் ஜூன் 7ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

### பிறப்பும் இளமையும்

பிராங் டவ் அயர்லாந்தின் தலைநகராகிய டப்ளின் நகரில் பிரித்தானிய சிவில் உத்தியோகஸ்தரான ஜோண் டவ்வுக்கும் சூசன் அம்மையாருக்கும் குடும்பத்தில் மூத்த புதல்வராகப் பிறந்தார். கல்வியிலும், விளையாட்டுகளிலும் முன்னணியில் திகழ்ந்த இவர் 1907-ம் ஆண்டு பல்கலைக் கழகப் பட்டதாரியானர். தந்தையைப் போன்றே சிவில் சேவையிற் சேர்ந்து தமது பதவியைத் திறம்பட வகித்து வந்தார்.

இறைபக்தியும் ஒழுங்கும் மிக்க வாலபரான டவ்வுக்கு தமது விசுவாசத்தைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற தணியாத தாகம் ஏற்பட்டது. எனவே அவர் வின்சென்ற் டி பவுல் சபையில் சேர்ந்து டப்ளின் நகரிலுள்ள ஏழைகளுக்குப் பணிபுரியலானர். இருவகையினர் அவரது விசேட கவனத்துக்கு உட்பட்டனர்—அதாவது ஒன்று குடிவெறியினல் பாதிப்புற்றோர், மற்றது பசிக்கொடுமை காரணமாக இலவச உணவை நாடி புரொட்டஸ்தாந்து சபையினரின் தருமஸ்தாபனங்களுக்குச் சென்ற கத்தோலிக்கர். இவ்விரண்டு தீமைகளையும் களைவதற்கு பிராங்க் பல முயற்சிகளை மேற்கொண்டார்

### சேனையின் பிறப்பு

பிராங் டவ்வின் அறப்பணிகளில் பல இளம் பெண்கள் துணைபுரிந்து வந்தார்கள். இவர்கள் ஞாயிறுதோறும் மைரா இல்லம் என்னும் வீட்டில் ஒன்றுகூடிச் செபித்து, தமது பணிகள் பற்றிக் கலந்துரையாடுவது வழக்கம். அத்தகைய கூட்டமொன்றில் தான் புனித லூயி மரிடி மொன்போட் எழுதிய ''மரியாளின் உண்மையான பக்தி'' என்னும் நூல் அவர்களுக்குக் கிடைத்தது. அதில் அடங்கிய கருத்துக்கள் பிராங்கைப் பெரிதும் கவர்ந்தன.

1921-ம் ஆண்டு செப்டெம்பர் 7-ம் திகதி, பிராங் டவ், புனித நீக்கிலார் ஆலயத்தின் உதவிப் பங்குத்தந்தை பிதா மைக்கல் டோஹர் ஆகியோரும் 15 இளம் பெண்களும் மைரா இல்லத்தில் கூடியிருந்தனர். தேவதாயின் திருச்சுருபத்தின் முன் பரிசுத்த ஆவியின் துணையை வேண்டி, செபமாலை செபித்தபின் தமது திட்டங்களை வகுக்கலாயினர். தமது பணிகளை விஸ்தரிக்க விரும்பி அண்மையிலுள்ள வைத்தியசாலையொன்றில் நோயாளரைத் தரிசிக்கத் தீர்மானித்தனர். இதற்கென அவர்கள் அமைத்த சங்கம் அப்போது இரக்கத்தின் மாதா சபை என்றுதான் அழைக்கப்பட்டதெனினும் அதுவே சேனையின் கருவாக அமைந்தது. இதற்கு நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே ''மரியாயின் சேனை'' என்னும் பெயர் இதற்குச் சூட்டப்பட்டது

டப்ளின் நகரில் ஐந்நூறு சேனைக்கிளைகள் ஆரம்பிக்கப்பட்டு வீரத்துவம் பொருந்திய பணிகளை ஆற்றிவந்த பொழுதிலும் திருச்சபை அதிகாரிகளின் அங்கீகாரத்தை அது உடனடியாகப் பெறவில்லை. ஆனல் பிராங் டவ் அதனல் மனஞ்சோர்ந்து விடாமல் தளராத விசுவாசத்துடனும் மன உறுதியுடனும் தொடர்ந்து உழைக்கலானர். சில வருடங்களில் அயர்லாந்து தேசத்தில் மட்டுமல்லாது அயல்நாடுகளிலும் சேனை மிக விரைவாகப் பரவலாயிற்று 1928இல் கடல் கடந்த முதல் பிரசீடியம் கிளாஸ்கோ நகரில் நிறுவப்பட்டது. 1931 இல் அமெரிக்காகண்டத்தில் முதன் முதலாக நியூ மெக்சிக்கோ என்னுமிடத்தில் சுரங்கத் தொழிலாளர்களுக்கு ஒரு பிரசீடியம் அமைக்கப்பட்டது.

### பல்துறை அறிஞர்

பிராங்க்டவ் மெய்யியல், இறையியல் மறையியல் ஆகிய திருமறை சார்ந்த விடயங்களில் ஆழ்ந்த அறிவு பெற்று விளங்கினர். சிக்கலானபல விடயங்களை எளிமையான நடையில் விளக்கக் கூடிய ஒரு சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், சேனை அங்கத்தவரை ஆன்மீக வாழ்வில் வழிநடத்தும் பொருட்டு அவர் எழுதிய சேனைக் கைந்நூலே இதற்குச் சான்று. ஆழ்ந்த இறைஞானத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்நூல் குறைந்த பட்சம் அறுபது மொழிகளில் பிரசுரமாகியிருக்கிறது. சமயத்துறையில் மட்டுமல்லாது கணிதம், விஞ்ஞானம், வைத்தியம் போன்ற உலகியல் அறிவுத் துறைகளிலும் அவருக்கு நிரம்பிய அறிவுண்டு.

### புதிய பாதை வகுத்தவர்

பிராங்க டவ் திருச்சபையின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினர் என்று கூறலாம். மறைப்பணி என்பது துறவறத்தினர்க்கே உரியது எனக் கருதப்பட்டுவந்த காலத்தில் திருச்சபையின் பணியில் பொதுநிலையினர்க்கும் பங்குண்டு என்பதை செயல் மூலம் எடுத்துக்காட்டி, செயலற்றிருந்த மக்களுக்கு ஒரு உந்து சக்தியாக நின்று ஆர்வத்துடன் செயற்படத் தூண்டியவர்.

### தீர்க்கதரிசன நோக்கு

வத்திக்கான் சங்கம் கூடி பொதுநிலையினரின் மாண்பை எடுத்துரைக்கு முன்னரே, குருத்துவ அழைத்தல்கள் அருகி பொதுநிலையினர் மறைப்பணியில் ஈடுபடவேண்டிய அவசியம் ஏற்படுமுன்னரே பிராங்க் டவ் பொதுநிலையினரை அப்போஸ்தல பணிபுரிய அழைத்தார். சேனை தொடங்கி மூன்று மாதங்களே ஆகியிருக்கையில் அது அகில உலகரீதியாக செயற்படும் ஒரு நாள் வரும் என அவர் உரைத்த தீர்க்கதரிசனம் அவர் வாழ்நாளிலேயே நனவாயிற்று, அவர் அகில உலக ரீதியாக சிந்தித்தவர். ஆனல் சிறுகச் சிறுக, மனிதருடன் மனிதர் கொள்ளும் உறவின் மூலமாகவே சமுதாயத்தைச் சீர்திருத்த விழைந்தவர்.

### ஓர் இனிய மனிதர்

அரச அதிகாரியும், பேரறிஞரும், பொதுநிலையினர் தலைவருமாக விளங்கி, திருச்சபையினலும் அரசினலும் கௌரவிக்கப்பட்டு சர்வதேசப் புகழ் பெற்று விளங்கியபோதும் பிராங்க் டவ் தமது வாழ்வில் எளிமையைக் கடைப்பிடித்தவர். 91 வயதில் அவர் இறக்கும் வரை அவர் உபயோகித்த வாகனம் அவரது சைக்கிள் தான். தமது பாரிய வேலைகளின் மத்தியிலும் அவர் எண்ணற்ற மக்களுடன் நட்புறவு பூண்டு வாழ்ந்தார். அந்தஸ்து வேறுபாடு எதுவுமின்றி அனைவருக்கும் ஒரேவிதமான அன்பும், மரியாதையும் அளித்தவர். சுருங்கக் கூறின் அனைவரிலும் கிறிஸ்துவையே கண்டவர், அவரது பரிவு, அனுபவம், நேர்மை இவை கருதி அவரிடம் ஆலோசனைகோரி வந்தோரும் பலதிறத்தோர். குழந்தையுள்ளமும், நகைச்சுவையுணர்வும் உடையவர்.

### வெற்றியின் இரகசியம்

இந்த விந்தை மனிதரது வெற்றியின், அவரது ஆன்மீக செல்வாக்கின் இரகசியமென்ன? இந்த வெற்றிக்கு அடித்தளமாக இருந்தது அவரது சொந்த புனிதத்துவம், விசுவாசம், இறை நம்பிக்கை, தேவதாயின்மீது கொண்ட பக்தி என்பவைதான், திருச்சபையைக் கிறிஸ்துவின் மறையுடலென அவர் உணர்ந்தார். சாதாரண மக்களும் வழிவகை தெரிந்தால் திரச் செயல்களைச் செய்வார்கள் என்பது அவரது திடநம்பிக்கை, அவருக்கு நிர்வாகத் திறமை மட்டுமல்ல மக்களைக் கவரும் ஆளுமையும் இருந்தது. அவரது பேச்சும், எழுத்தும் பிறரைச் செயலாற்றத் தூண்டின.

இறுதியாக சேவைக்கு சக்தி தரும் ஊற்று செபம் என்பதை அவர் எப்போதும் வலியுறுத்தி வந்தார். செபம் இன்றி எந்தக் காரியத்தையும் தொடங்கலாகாது என்ற கொள்கையைத் தாம் கடைப்பிடித்து வந்ததுடன் சேனை ஒழுங்குகளிலும் செபத்துக்கு முதலிடம் அளித்தார். சேனைச் சேவையின் சிறப்பு பல காரியங்களைச் சாதிப்பது அல்ல, சேவை செய்வோரையும், சேவை பெறுவோரையும் ஆன்மீகத்தில் உயரச் செய்வதேயாகும். இது அவர் எழுதிய கைந்நூலின் சாரமாகும்.

# பங்குத் தளங்களில்....

## நறுவிலிக்குளம்

ஆரோக்கிய அன்னையின் திவிழா நறுவிலிக்குளம் மாதிரிக்கிராமத்தில் 8 05.89 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலியுடன் நிறைவெய்தியது அருள்திரு. ஸ்ரனி (உயிலங்குளம் பங்குத்தந்தை) அருள்திரு. P அருள்நாதன் அடிகளாரும் அருள்திரு. போல் நட்சத்திரம் (நானாட்டான் பங்குத்தந்தை) திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஆதரவளித்தார்கள். திருவிழாவன்று மாலை விளையாட்டுப் போட்டிகள் நடத்தி மாதிரிக் கிராமம் மகிழ்ச்சியுற்றது.

வி. அ. லெம்பேட்.

★

## வஞ்சியங்குளம்

புனித வளனர் திருவிழா புனித இராயப்பர் ஆலயத்தைச் சேர்ந்த மூன்று கிராமங்களினதும் குடும்பத்தலைவர்களால் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. 3 நாள் நவநாட்களை அவர்கள் தாமாகவே முன்வந்து நடத்தி புனித சூசையப்பரின் புகழைப்பரப்பினர்கள் 30.04.89 அன்று திருப்பலியில் விசேட விதமாய்ப் பங்கேற்று, விசுவாசிகள் மன்ருட்டு, காணிக்கை, திருவிருந்து அருந்தல்களில் கலந்து தங்கள் விசுவாசத்தைக் காண்பித்தார்கள். பலியின் பாடல்களிலும், பாடகர் குழாமோடு இணைந்து பாடி இளைஞர்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட்டார்கள். மறையுரையில் அருள்திரு. அருள்நாதன் அடிகள் அன்றைய நற்செய்தியோடு புனித வளனரின் வாழ்வையும் இணைத்து நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை விசுவாசத்திலும் இறையன்பிலும், வளர்க்க புனிதரைப்போல் நாமும் வாழவேண்டும் என அறிவுரை வழங்கினர்கள்.

V. A. L.

★

## புங்கைநகர்

புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் கடந்த மூன்று வருடங்களாக கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் ஆசிரியை திருமதி எம். எம் ஏ. பெர்ணண்டோ அவர்களுக்கான பிரிவு உபசாரவிழா கடந்த 5-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மேற்படி வித்தியாலய அதிபர் திரு அ. லியோன்சியஸ் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திருமதி லூர்து ஞானரெத்தினம், ஆசிரியை யூ. செபராஜேஸ்வரி, வானெலி அறிவிப்பாளர் திரு. வி. அன்ரனிஸ், ஆசிரியை செல்வி ஹேமலதா, ஆசிரியை செல்வி மியூறின் றூபி அருள்பிரகாசம், அதிபர் திரு இ. கருணாகரன் ஆகியோருடன் இன்னும் பலர் பங்குபற்றினர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. மாற்றலாகிச் செல்லும் ஆசிரியை நன்றி உரையாற்றினர்.

செல்வி ஞா. மேரிமாலதி

★

## நெடுநகர்

பேதங்களை வேற்றுமைகளை மறந்து எல்லோரும் ஒன்றுபடும் இடம் விளையாட்டு மைதானமே

நெடுந்தீவில் தொழிலாளர் தினத்தை பங்கில் இயங்கும் புனித அந்தோனியார் இளைஞர் கழகம் தன் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியுடன் 1-5-89 வெகு சிறப்பாகக் கொண்டாடியது.

காலை 7.30 மணிக்கு புனித பற்றிமா மாதா ஆலயத்தில் திருப்பலி பங்குத் தந்தை M. M. V. அமிர்தகுமார் அவர்களால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. மாலை நிகழ்ச்சிகள் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 1.30 க்கு ஆரம்பமாகியது விழாவுக்கு சிறப்பு விருந்தினர்களாக பங்குத்தந்தை M.M.V. அமிர்தகுமார் அவர்களும் நெ. கொ/அதிபர் இரா சின்னத் தம்பி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில் உரையாற்றிய அருள் திரு. ஞானரட்ணம் அவர்கள் ''இக்கட்டான இக்காலகட்டத்தில் இப்படியொரு விளையாட்டுப் போட்டியை கண்டு களிக்கப் பெறும் இத்தீவக மக்கள் பாக்கியம் பெற்றவர்கள்'' என வர்ணித்தார் பங்குத் தந்தை ''விளையாட்டு ஒரு மனிதனைப் பூரண மனிதனுக்கிறது. பேதங்களை, வேற்றுமைகளை மறந்து எல்லோரும் ஒன்றுபடும் இடம் விளையாட்டு மைதானமே'' என்ருர்

விழாவுக்கு தலைமை தாங்கிய திரு. ப. செபமாலை அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

நெடுநகர் நேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனத்தில் பிறந்த தத்துவம்

சூரியன் நெருப்புக் கதிர்களைக் கக்கிக்கொண்டிருந்தான். அந்தப்பேய் வெயிலிலும் இவன் ரோட்டில் தனியாக வந்துகொண்டிருந்தான். வீதி வெறிச்சோடிக் கிடக்கின்றது. ஆள் அரவமே இல்லை. இக்கால சூழ்நிலையை, அதன் தாக்கத்தை அந்த வீதி படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருந்தது. எப்படியோ அந்தத் தேனீர்க் கடையடிக்கு வந்து விட்டான். வழக்கமாக வரவேற்கும் அந்தக் கடை முதலாளி செல்லையாவில் இன்று இனம் புரியாத மாற்றம் காணப்பட்டது. அவர் தனது முகத்தை நீட்டிக்கொண்டிருப்பது சுரேனுக்கு வியப்பாகத்தான் இருந்தது.

வேலை முடிந்துவந்து அவரிடம் ஒரு ரீ குடித்துவிட்டுத்தான் தன்னுடைய இடத்திற்குத் திரும்புவான். அவன் வாழ்க்கையில் அந்தச் செல்லையாக் கிழவனின் உதவிக்கரம் செயலாற்றித்தான் இருந்தது. அவருக்கும், அவனுக்கும் இடையில் தந்தை—மகன் உறவு நிலவி வந்தது. கடந்த இரண்டு வருடங்களாக அவன் உச்சி வெயிலில் வந்து அக்கடையில் சற்று இளைப்பாறித்தான் செல்வான். செல்லையாவின் அன்பு மொழிகளும், உரிமையுடன் கண்டிக்கும் 'மனப்பாங்கும் அவருடைய ரீயை விட அவனுக்கு அதிக உற்சாகத்தைத் தருவதுண்டு. வழமைக்கு மாறான அவரின் இன்றைய மௌனம் சுரேனுக்கு புரியாத புதிராக இருந்தது.

சுரேன் கேட்காமலே அவர் ரீ ஒன்றைப் போட்டு அவனுக்கருகில் வைத்துவிட்டு தன் மேசையில் போய் அமர்ந்து கொள்கிறார். சுரேன் எதுவும் புரியாதவனாக ரீயைக் குடிக்க ஆரம்பிக்கின்றான். அவன் சிந்தனைப் பறவை வேகமாகச் சிறகடித்துப் பறந்து கடந்தகால நிகழ்ச்சிகளை இரை மீட்டுகிறது.

லக்ஷினியோடு உள்ள உறவு இன்று நேற்றல்ல, இரண்டு வருட வரலாற்றைக் கொண்டது. அவளின் தன்னலமற்ற சமூகசேவையும் அடக்கமான பண்பும், முற்போக்குச் சிந்தனையும் அவனை வெகுவாகப் பாதித்திருந்தது. பெண்ணடிமைத் தனத்தினால் இன்னும் பெருமூச்சுவிடும் சமூகப் பெண்களுக்கெல்லாம் இவள் ஒரு புதுமைப் பெண். யாருடனும் இலகுவில் பழகக்கூடிய லக்ஷினி எல்லாருக்கும் எல்லாமாக விளங்கினாள்,

அவன் அமைதிப் படையினால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் இருந்தபோதே சுரேனுக்கும், லக்ஷினிக்கும் இடையில் அறிமுகம் ஆரம்பமாகியது. ஒரு நாள் லக்ஷினி வைத்தியசாலையில் நோயாளிகளைப் பார்வையிட்டு ஆறுதல் வார்த்தைகள் கூறிக்கொண்டிருந்தாள். ஒவ்வொரு நோயாளியையும் அணுகி அவர்களின் சோகக் கதைகளைக் கேட்பதில் அவள் 'அன்னை தெரேசா'வாக அங்குள்ளவர்கள் கண்ணுக்குப் பட்டாள். அவள் சுரேனிடமும்தான் வந்தாள்.

"நீங்க எத்தன நாளாக இங்க இருக்கிறிங்க?"

"இண்டையோட மூண்டு கிழம"

## சிறுகதை

"வீட்டில இருந்து யாரும் பாக்க வரலையா?" இக்கேள்வி அவன் உள்ளத்திலே ஆயிரம் கீறல்களை ஏற்படுத்திச் சென்றது. தன்னை ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு 'இல்லை' என்ற பாணியில் தலையை அசைக்கின்றான் லக்ஷினி இதுவரை சந்தித்த நோயாளிகளை விட இவன்தான் சற்று வித்தியாசமானவன்:

"ஏன் உங்கள ஒருதரும் பாக்க வரயில்ல?"

"எனக்கு யாருமே இல்ல. இருக்கிறவங்களும் வரமாட்டாங்க அதனால்தான் யாருமே இல்ல எண்டன்." சுரேன் தன் மனக் குமுறலை அடக்க முடியாதவனாக அழ ஆரம்பித்தான் ஒருவாறு அவனைச் சமாதானப்படுத்திய லக்ஷினி அமைதியான பார்வையால் அவனை நோக்கினாள். அப்பார்வை "கதையைத் தொடர்ந்து கூறு" என்பது போல இருந்தது.

*************

"தமிழ் நேசன்"
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை.

*************

"விடுதலைப் போராட்டத்தில் இணைந்து போராடிய என்னை எனது பெற்றோர் உறவினர் அனைவரும் ஒதுக்கிவைத்தனர். போராட்டத்தில் ஏற்பட்ட மாறுட்டத்தினால் நான் அதைக் கைவிட்டு சாதாரண வாழ்க்கை நிலைக்குத் திரும்பியபோது யாரும் என்னை ஏற்றுக்கொள்ள இல்ல. நான் அன்புக்காக ஏங்கினேன். யாரும் என்னை அன்பு செய்யல்ல, தனிமரமாக இருக்கும் என் வாழ்வு எனக்கு வெறுத்துப்போச்சுது." அவன் மூச்சு விடாமற்கூறி முடித்தான். தன் சோகக் கதையை ஒருவருக்கு வெளிப்படுத்தியதினால் அவன் முகத்தில் சிறிது அமைதி நிழலாடியது.

"அன்புக்காக வெகு சிலரே மடிகின்றனர். ஆனால், அன்பில்லாமல் பலர் மடிகின்றனர். நான் அன்பிற்காக மடியமுடியவில்லை என்றாலும் அன்பில்லாமல் மடிபவன் ஒருவனை என்னால் காக்க முடியாதா? நான் ஏன் முன்வரக் கூடாது. என்னால் இயலாதது அல்ல. எனக்குத் தைரியம் வேண்டும். என்றோ எங்கோ வாசித்த சில வரிகள் லக்ஷினியின் மனக்கண் முன் தோன்றி மறைகின்றன.

அவனுடைய வாழ்க்கைக் கதைகளை யாராவது கேட்க மாட்டார்களா? என அவன் அங்கலாய்த்த வேளையில் இப்போது இவன் கதையைக் கேட்ட ஒரே ஒரு மனிதப்பிறவி இந்த லக்ஷினிதான். வைத் வைத்தியசாலையில் அவனுடைய உடிகாயங்கள் அவனுக்குக் கொடுத்த வருத்தங்களை விட அவன் உள்ளத்தில் அனுபவிக்கும் வேதனையே அதிகம். அவன் கதையைக் கேட்க அவனுக்கு ஆறுதல்கூற அவளும் தொடர்ந்து வந்து போனாள். நாட்கள் நகர்ந்தன. அவன் காயங்கள் குணமடைந்தன. மனக்காயமும்தான். அவன் இப்போது புதிய கண்ணோட்டத்துடன் உலகைப் பார்க்க அரம்பித்து விட்டான். எல்லாமே ஒரே இருளாகவும், மனிதர் அனைவருமே வெறுப்புக்குரியவர்கள் என்ற கடந்தகால பார்வையில் ஒரு திருப்பம் ஏற்பட்டிருந்தது. அது லக்ஷினி அவன் வாழ்வில் குறுக்கிட்டதன் விளைவு.

சுரேன் அந்தத் தபாற்கந்தோரில் சிற்றூழியனாக வேலை செய்கின்றான். வாடகை வீடொன்றில் குடியிருந்து கொண்டு லக்ஷினியின் அன்பிலே வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்து கொண்டிருந்தான். அவர்களின் வைத்தியசாலைச் சந்திப்பு அன்புப் பரிமாற்றமாக வெளியிலும் தொடர்ந்து கொண்டிருந்தது.

அவன் ரீயைக் குடித்து முடித்துவிட்டான். அடிமண்டி வாயில் தட்டியபோது தான் ரீ முடிந்து விட்டதென உணர்ந்து தன்னிலைக்குத் திரும்பினான்.

சுரேன ரீ குடித்து முடிந்ததை உணர்ந்த செல்லையாக் கிழவன் படாரென எழுந்து தன் சறத்தை மடித்துக் கட்டிக்கொண்டான். அவருடைய முகத்தில் கோபக்கனல் தெறித்தது. சுரேனுக்கு எதுவுமே புரியவில்லை. கேட்கவும் அஞ்சினான். ஆயினும் அவரே ஆரம்பித்தார்.

"நீ யாரோடோ கதைச்சிப் பேசித் திரியிறதாக நான் கேள்விப்பட்டேன் நேற்றுத்தான் அறிய வந்தேன். நீ கதைச்சுத் திரியிற பெட்டை யார் எண்டு உனக்கு விளங்கல்லப் போல, என்ர மூத்தமகன் இரத்தினத்திட பெட்டையல்லோ அது தம்பி டேய், நீ யாரு, நாங்க யாரு, கொஞ்சம் யோசி பாப்பம். இரத்தினம் இதைக் கேட்டா என்ன நடக்கும் தெரியுமா? கொலைதான் விழும்...." மழை பெய்து ஓய்ந்ததைப் போல் இருந்தது.

சுரேன் சைக்கிளை எடுத்து மிதிக்கின்றான். சைக்கிளின் வேகத்தைவிட அவனின் சிந்தனைப் பறவை வேகமாகச் சென்று கொண்டிருந்தது. சைகைகள் அவனை அறியாமலே லக்ஷினியின் சினேகிதி வீட்டிற்குப் போகின்றது. அந்த நேரத்தில அவள் அங்கேதான் இருப்பாள்.

அவனைக் கண்டதும் அவளுக்கு ஒரே வியப்பாக இருந்தது. அவனின் முகத்தில் கவலையின் ரேகை படர்ந்திருந்தது. அவன் அவளுக்கு கடையில் நடந்தவை பற்றிக் கூறினான். அவ்வேளையில் இரத்தினம் அவ்விடத்திற்கு வேகமாக வந்துகொண்டிருந்தார். அவரின் அன்றைய வேகம் வாழ்வில் ஒரு நாளும் நடக்காத வேகம். அவர் கேள்விப்பட்டதெல்லாம் உண்மை என்பது போல அவர்கள் இருவரையும் ஒரே இடத்தில் கண்டு கொண்டார். லக்ஷினியை அண்டி வந்ததும் அவருடைய கால்களின் வேகம் குன்றியது. தான் எங்கு நிற்கின்றார் என்பதையும் அறியாதவராக தள்ளாடத் தொடங்கினார்.

தான் யாரை நிர்மூலமாக்க வேண்டுமெனக் கங்கணம் கட்டி வந்தாரோ, யாரைத் தொலைத்துக்கட்ட நினைத்தாரோ அவன்தான் தன் மகனுடைய வாழ்வைக் காப்பாற்றியவன். அவன் அவருடைய இதயத்தில் எப்பவோ ஓர் இடத்தைப் பெற்றுவிட்டான். இயக்கமோதலின்போது தன் மகனின் உயிர் இவன் கையில்தான் இருந்தது. இயல்பிலேயே கருணை உள்ளம் கொண்ட சுரேன் பலருக்கு மன்னிப்பு அளித்து வாழ்வு கொடுத்திருக்கிறான்.

இரத்தினம் அவர்களை நெருங்கியபோது எதுவுமே பேசாமல் மௌனமாக நின்றார்.

---

குருநாகலில் இரட்சகர் சபைக் கன்னியர்களின்

## நூற்றாண்டு விழா

இரட்சகர்சபையின் முதல் சுதேச தலைவியாக அருள்செல்வி பிறிசிற்றாவும் அவரைத்தொடர்ந்து அருள்செல்வி பைக்கலும் இன்று அருள்செல்வி செபமாலையும் தலைவியாக வழி நடத்துகின்றனர்.

இச்சபையினர் தங்கள் சபை ஆரம்பித்த நூற்றாண்டு நிறைவு விழாவை உலகெங்கிலும் சிறப்பாக கொண்டாடினாலும் நம் ஈழநாட்டில் காலநிலைகள் வழமைக்கு திரும்பாதபடியால் அதனை உரியதினத்தில் கொண்டாடி மகிழ சந்தர்ப்பத்தைக் கொடுக்கவில்லை இருந்த போதிலும் ஓர் அளவு அமைதியாக அவ்விழாவை 1989-05-13-ம் திகதி அன்று குருநாகல் மறைமாவட்டத்தில் கொண்டாடி மகிழ்ந்தனர். இவ்விழாவின்போது குருநாகல் மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு. றேமன்பீரீஸ ஆண்டகை அவர்கள் தலைமை தாங்க புனித ஆனாள் அன்னை பேராலயத்தில் கூட்டுத்திருப்பலி சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நிறைவேற்றப்பட்டது இத்திருப்பலி வேளையின்போது சிங்களத்தில் பேரருள் திரு றேமன்பீரீஸ் ஆண்டகையும் தமிழில் அருள்திரு. இம்மானுவேல் அடிகளாரும் "அன்பாலே இறைவன் நம்மை தெரிந்துள்ளார் அதுவும் கோடானகோடி மாந்தரிலே கோமகன் நம்மை தேர்ந்துள்ளார் என்ற கோட்பாடுகளுடன் பணிசெய்யும் இரட்சகர் சபை கன்னியர்களை இவ்வேளையில் இலங்கைத் தாய்த்திருச்சபை போற்றி நிற்கின்றது. இவ்வாழ்த் தொலிக்கெல்லாம் காரணம் 'ஈன்றபொழுதிலும் பெரிதுவந்த தன்மகனை சான்றோன் எனக் கேட்டதாய்' என்ற தெள்ளுதமிழ் வள்ளுவன் வார்த்தைக்கேற்ப ஈன்ற தாயும் வளர்த்தெடுத்த தந்தையுமே சாரும். எனவே இச்சபை கன்னியர்களின் பெற்றோர்களையும், குடும்பத்தவர்களையும் நாம் திருச்சபை சார்பாக வாயார வாழ்த்தி நிற்கின்றோம்." என்ற பொருள்பட தங்கள் மறையுரையை ஆற்றினர் ஆயர் அவர்களால் அச்சபை கன்னியர்கள் அனைவர்க்கும் இரட்சகர்சபை கன்னியர் சபை ஒழுங்கு விதிநூல் அன்பளிப்பு செய்யப்பட்டது. நன்றியுரையுடன் விழா நிறைவு பெற்றது

தகவல்: அருள் செல்விகள்:
யூடிற் நெல்சன்
அஸ்லினா பீரீஸ், பிறிஞ்சி,
பெர்னாண்டோ.

---

மயிலிட்டிப் பங்கில்...

## தையல் பயிற்சி நிலையம்

யாழ்/ மேற்றிராசன மனித முன்னேற்ற நடுநிலையத்தினரின் (Hudec) உதவியுடன் பலாலி புனித ஆரோக்கிய மாதா அன்னை ஆலயத்தில் பாதிக்கப்பட்ட வறிய பிள்ளைகளுக்கான இலவச தையல் பயிற்சி நிலையம் ஒன்று அருள்திரு சிங்கராயர் o. m. i. அடிகளாரால் ஞாயிற்றுக்கிழமை (07-05-89) அன்று திறந்து வைக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் ஷெி ஸ்தாபனத்தின் உதவியுடன் மயிலிட்டியில் இயங்கும் சென் மேரிஸ் தையல் பயிற்சி நிலையத்தில் அங்குபயிற்சிபெற்ற முதற்கட்ட பிரிவு பிள்ளைகளுக்கு யாழ்/மேற்றிராசன மனித முன்னேற்ற நடுநிலையத்தின் இயக்குனர் அருள்திரு பயஸ் அடிகளார் சான்றிதழ்கள் வழங்கி முதற்கட்ட பிரிவு பயிற்சியை முடித்து வைத்து இரண்டாம் கட்ட பிரிவு பிள்ளைகளுக்கான பயிற்சி வகுப்பினை ஆரம்பித்துவைத்தார்.

அன்று பயிற்சி முடித்து வெளியேறும் பிள்ளைகள் தங்கள் ஆக்கங்களை வெளிப்படுத்தும் முகமாக சிறிய தையல் கண்காட்சி ஒன்றையும் நடாத்தினார்கள். இக் கண்காட்சியை மயிலைப்பங்குத்தந்தை அருள்திரு. பிற்றர் துரைரட்ணம் அடிகளார் மயிலைப் பங்கு இளைஞர் ஒன்றிய ஆதரவுடன் நிர்வகித்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் கரம்

1984 மார்கழி 4 முருங்கன் மக்களால் என்றுமே மறக்க முடியாத நாள். சிறிலங்கா இராணுவம் படுமோசமாக தன் மனித வேட்டையை நிகழ்த்தி 300 க்கும் அதிக மானோரை சுட்டுக்கொன்ற தினம். அனைவர் மனத்திரையிலும் நீங்காத நினைவாக நிழலாடும் நாள். அன்றைய தினம் முருங்கன் தபால் நிலையத்தினுள் இராணுவம் புகுந்து கடமையில் இருந்தோரை அழைத்து வரிசையில் வைத்துச் சுட்டுக்கொன்றது.

அவன் அத் தபால் நிலையச் சிற்றூழியன். ஏதோ அலுவலாக மேல் மாடியில் பைல்களைப் புரட்டிக் கொண்டிருந்தான். அவனருகே ஒரு முஸ்லிம் நண்பனும் இருந்தார் தூரத்தே துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது. அது முருங்கன் ரவுணில் நடந்த மனித வேட்டை இவர்கள் அதை அறிந்திருக்க நியாயமில்லைத் தான். இராணுவ வாகனங்கள் தபால் நிலையத்தினுள்ளும் வந்து நின்றன கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அனைவரையும் 'ஐடெண்டிக் காட்' உடன் வருமாறு கட்டளையிட்டனர். கொலை வெறியர்கள். முஸ்லிமா? தமிழா? என அறிந்து பிரித்து வைத்து தமிழரை ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்றனர். ஒவ்வொருவரும் துடிதுடித்து அலறியவண்ணம் இறக்கின்றனர்.

மேல் மாடி அறையில் அவனுக்கும் இந்த நிலைமை தான ஏற்படப் போகிறது முஸ்லிம் நண்பனைப் பார்க்கிறான். இதயம் படபடக்கிறது. இராணுவம் எந்த நேரத்திலும் மேலே வந்து சோதனை நடத்தலாம். இவன் பிடிபட்டால் இவனுக்கும் கீழே உள்ளவர்களின் நிலைமைதான்.

முஸ்லிம் நண்பனின் மூளை வேகமாக வேலைசெய்தது. "மச்சான். நீ இந்த பெட்டிக்குள்ள இரு. நான் இதைப் பூட்டித் திறப்பை எடுக்கிறன். வந்து கேட்டால் அந்தப் பெட்டி பூட்டு எண்டு சொல்றன்" சொன்னபடியே செய்தனர்.

சில மணிகளில் இராணுவம் அவ்விடத்தை விட்டு அகன்றது ...ன் வியர்வையில் தோய்ந்தவனாக பெட்டியிலிருந்து வெளியே வந்தான. இப்போது அவனுக் கைகொடுதது உயிரைக் காப்பாற்றிய கடவுள் அந்த முஸ்லிம் நண்பன்தான். உயிர் தப்பிய மகிழ்ச்சியில் நன்றிப் பெருக்குடன வீடு நோக்கி தன் சைக்கிளை வேகமாக மிதிக்கிறான்.

(உண்மைச் சம்பவம்)

தமிழ் நேசன்
குருத்துவக் கலூரி
கொழும்புத்துறை




அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
9-6-198 .

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

1925-ப் ஆண்டு மெசஸிக்கோ நாட்டிலுள்ள ஜாலஸ்கோ மாகாணத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. பதினெட்டு வயதுள்ள ஒரு வாலிபனைக் கைது செய்து, அவனைப் பார்த்து, 'கிறிஸ்து ஒழிக; காலெஸ் வாழ்க" என்று கலகக்காரர்கள் சொல்லச் சொன்னார்கள் ஆனல் அவன் மறுத்துவிட்டான். சேவகர்கள் அவன் கையைப் பின்பக்கம் வைத்துக் கட்டிவிட்டு லொறியை ஓட்டினார்கள். லொறியைப் பையனுடைய வீட்டுக்கு முன்னுல் நிறுத்தினார்கள். இப்போது சொல்வாயா? 'கிறிஸ்து ஒழிக, காலாஸ் வாழ்க" என்று கேட்டார்கள். "நான் ஒரு கத்தோலிக்கன். ஆகையால் கிறிஸ்து வாழ்க" என்ருன் வாலிபன்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பெண், வீட்டிற்குள் போய், "ஐயோ வந்துபார். வேதத்தை மறுதலிக்கச் சொல்லி உன் மகனைக் கொல்கிருர்கள்" என்ருள. தாய் ஓடிவந்து பார்த்தாள். மக்கபேயர் ஏழு பேரின் தாய்க்கு இருந்த வீரம் இவளுக்கும் உண்டானது "உன்னைக் கொன்ருலும் சரி' வேதத்தை மறுதலியாதே, உயிரைவிட விசுவாசமே உனக்கு மேல்" என்று மகனை உற்சாகப்படுத்தினுள்.

பையன் தன் பலமெல்லாம் கூட்டி, "கிறிஸ்துநாதர்" நீடூழி வாழ்க" என்று உரக்கக் கூவிக்கொண்டே உயிர் நீத்தான்.

இன்றும் கிறிஸ்து தனக்காகக் குரல்கொடுக்க எம்மை அழைத்தவண்ணம் இருக்கின்ருர். வாழ்க்கையாலும் வார்த்தையாலும் அவரது அன்புக்குச் சான்று பகரக் கூப்பிடுகின்ருர்.

அவர் வாழ்க!

அவரது பெயர் என்றும் போற்றப்படுக!

அன்பு நெஞ்சன் வி. பி.

## குருசுமுத்தண்ணையின் கிசுகிசு-43

அடைக்கலம்:- பட்டம் பதவிக்காக அலையுதுகள் அண்ணை?...

குருசுமுத்தண்ணை:- அதுகள் எல்லாம் புத்தகப் பூச்சிகள் தான் கபி பட்டதலை வேண்டி வைச்சிட்டு சின்னத்தனமாகவும் சிலதைச் செய்வினம். அதைவிடு.

அடைக்கலம்:- அப்ப பட்டம் பதவியைப் பாத்துத் தானே அண்ணை மதிக்கினம்?

குருசு:- எடதம்பி படிக்கவேணும், அதால சமூகத்துக்கும், ஏதும் செய்யவேணும். அதை நீ செய். வீணுப் புத்தகப் பூச்சியாய் இருந்து பட்டங்களை சட்டங்களாக அடிக்கி வைக்க மட்டும் படிக்காதை.

## ஆற்றல்களில் உயிர்த்தெழுவோம்!

ஆழ்குழியில் வீழ்ந்து
ஆர்வத்தை அழித்தோம்,
ஆளுமையை அழித்து
ஆற்றல்களை இழந்தோம்.

ஆற்றல்களை வளர்க்காது
ஆயிரம் பேசினேம்
அழிவுகளில் அகப்பட்டு
அபிவிருத்தி தேடினேம்.

குரோதங்களை எம்மில்
குறைக்காது வளர்த்தோம்.
குற்றங்கள் புரியவே
ஆற்றல்களை விதைத்தோம்.

ஆற்றல்களை வளர்த்து
அழிவுகளை நிறுத்துவோம்,
உழைப்புடன் முன்னேறி
உயர்வைப் பெற்றிடுவோம்.

எஸ். [illegible]

## நடந்துவிடு ...!

பொய்மைகளை அகற்றி
உண்மைகளைப் புகுத்தி,
உரிமைகள் பெற்று -
உவப்புடன் வாழ
நடந்துவிடு!
குறைகளை அகற்றி.
நிறைவினைப் பற்றி,
உளமகிழ்ச்சி பெற
இறை ஒன்றிப்புக்கு
நடந்துவிடு!
கறைபடிந்த உள்ளத்தை
மாற்றி
தூய உள்ளம் பெற்றிட,
நித்தமும் இறைவனை
நினைந்திட
புதிய பாதையில் நடந்துவிடு!

[illegible]



## கிறிஸ்தவ திருமண ஆயத்தம்

(சென்ற வார தொடர்ச்சி)

முற்ருகப் பூர்த்தியாக்கப்பட்ட விவாக பந்தனமானது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையில் நிலவும் பிரிக்க முடியாத ஒன்றிப்பின் அடையாளமாகும். புனித அகஸ்தீனு போதிப்பதும் இதுவே. "கிறிஸ்து உயிர்வாழும் வரை, திருச்சபையும் அவரில் நிலைத்திருக்கும் வரை, இநத ஒன்றிப்பும் நிலவும் பிளவுபடாது, முறிவுபடாது.

ஆகவே விவாகமானவர்கள் விவாகரத்துச் செய்து தங்கள் மணவாழ்வைப் பாழ்படுத்தவொண்ணது நமது இறைவனின் நகரில், அதாவது திருச்சபையல் இந்த அருட்சாதனம் அவ்வளவு மேலாக மதிக்கபபடுவதால் மகப்பேற்றுக்காக ஒருத்தியை விவாகம் செய்திருந்தாலும் மனைவி மலடியானல் சந்தானத்திற்காக வேறு ஒருத்தியை விவாகம் செய்வது சட்ட விரோதமாகும். கிறிஸ்தவர்களின் விவாக பந்தனம் விபச்சாரத்தினல் அதாவது மண ஒப்பந்தம் செய்தவர்களில் ஒருவர் பிரிந்துதான் விரும்பும் வேருெருவருடன் சென்று விட்டார் என்று வைத்துக்கொள்வோம் அடுத்தவரின் கடமை என்ன? என்னை விட்டுப் போனவர் எப்போது திரும்பி வருவாரோ ஏற்றுக்கொள்வேன் என்னும் மனநிலையில் இருக்கவேண்டியதுதான். அதை விடுத்தானும் விவாகரத்து டுப்பதோ, அன்றேல் வேருெருவரை நாடுவதோ விலக்கப்படுகிறது. வரும்பொழுது ஏற்பேன் என்னும் மனநிலையில் உள்ளவர் தன் கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றத் தகுதியுடையவராகின்ருர்.

குணவேறுபாடு:- அதாவது எதிலும் ஒன்றித்த மனம் இல்லை ஒருவர் ஒருவருக்கு விட்டுக்கொடுப்பதில்லை, இன்னும் இடையிட்டு வந்த வியாதியின் வேறுபாடாயும் இருக்கலாம். அதற்காக ஒருவரை ஒருவர் பிரிதல் விலக்கப்படுகின்றது.

கட்டவிழாமை:- அநேக நன்மையைத் தருகின்றது. 1. திருமணம் நீடித்த உறுதிப்பாடுடையது என்னும் உத்தரவாதத்தைத் தம்பதியர் பெறுகின்றனர். உண்மை அன்புக்கு என்றும் முடிவிராது (கொரி. 13:8) 2. பெருந்தன்மையோடு மனப்பூர்வமாக ஒருவர் ஒருவருக்கு அன்பு செய்யும் இயல்பு உண்டாகின்றது. 3 அகத்திருந்தோ புறத்திருந்தோ கற்புடமைக்கு எதிராக எழும் சோதனைகளுக்கு அது ஓர் அரண்போல் விளங்குகின்றது 4 வயோதிபத்திலும் துன்பகாலங்களிலும் கைவிடப்படக் கூடும் என்னும் பயம் நீங்குகின்றது 5. அமைதியும் பாதுகாப்பு உணர்வும் கிடைக்கின்றது 6 ஒருவர் ஒருவரின் கௌரவத்தை விழிப்புணர்வுடன் பேணுவதுமன்றி ஆபத்து வேளையில் ஒருவர் ஒருவருக்கு உதவுவர் என்ற நம்பிக்கையும் அளிக்கின்றது. 7 மரணம் மாத்திரமே பிரிக்கக் கூடிய கட்டவிழாமை, ஒருவர் ஒருவரின் மேலான நித்திய நன்மைகளை அடைவதற்காகவே என்று நினைப்பூட்டுகின்றது. 8. பிள்ளை வளர்ப்பு, கல்வியூட்டல், போன்ற பணியை ஆற்ற வசதி அளிக்கின்றது. 9 நேர்மை வாழ்வுக்கும். ஒழுக்க சீலத்திற்கும் திருமணத்தின் முறிவுபடாமை உறுதுணை புரிகின்றது. கிறிஸ்தவ கணவன் மனைவியர் தங்களை விலங்கிடப்பட்டவர்களாக கருதலாகாது. திருவருட்சாதனம் என்னும் பொற் சங்கிலியால் அணி செய்யப்பட்டவர்கள் எனவும், இறை உதவியோடு கூடிய வலிமை பெற்றவர்கள் எனவும் கருதவேண்டும். நடத்தையிலும், மனதிலும் கிறிஸ்துவுக்கும் கடவுளுக்கும் இடையில் உள்ள ஒன்றிப்பின் சாயலாய் திகழவேண்டும்,

மெய் விவாகம் என்னும் அருட்சாதனத்தால் அழியாத முத்திரை பதிக்கப்படாவிடினும் அதன் பயனுகிய அர்ப்பணவாழ்வு காலா காலமாக நிலைத்திருக்கும். கணவன் மனைவியர் அதனேடு ஒத்துழைக்கும் போது தங்கள் பொறுப்புக்களை பிரமாணிக்கமாய் நிறைவேற்ற இறைவன் நமக்குத்தரும் திடம், நமது முயற்சியாலும் சுறுசுறுப்பாலும் வளர்ச்சி அடையும். பழைய ஏற்பாட்டிலே மோயீசன் சட்டம் மணமுறிவை அனுமதித்தாலும் "உங்களுடைய முரட்டுத்தனத்தின் பொருட்டே இக்கட்டளையை எழுதிவைத்தார்" படைப்பின் தொடக்கத்தில் இருந்தே கடவுள் அவர்களை ஆணும்பெண்ணுமாய் படைத்தார். (மாற்கு 10: 5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம், த. பெ. இல. 2. யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர் - 25 அபக்கூக்-4

இறைவாக்கினர் அபக்கூக் ஆண்டவரிடம் மீட்புக்காக மன்றாடுகிறார். இஸ்ராயேலரின் வரலாற்றில் கடந்த காலங்களில் ஏற்பட்ட நெருக்கிடைகளின் போது இறைவன் தலையிட்டு இஸ்ராயேலர்களை மீட்டார் அதேபோல குழப்பங்களும், துன்பங்களும் மிகுந்த தனது காலத்திலும் இறைவன் தலையிட்டு மீட்க வேண்டும் என வேண்டுகிறார்.

இந்த வேண்டுதல், இறையாற்றல், இறைவனின் தோற்றம் பற்றிய மாட்சிமை மிக்க பாடலாகும். இறைவன் வல்லமையோடு புயல் வடிவில் வருகிறார், அவரது வரவினால் நிலம் அதிர்கிறது, நாடுகள் திடுக்கிட்டுப் பதறுகின்றன என்று கூறி உலக வரலாற்றின் மேல் இறைவனுக்குள்ள மேலாண்மையை எடுத்துக்காட்டுகின்றார் இப்பாடல் விசுவாசமிக்க பாடலாகும் இப்பாடலில் வரும் வர்ணனைகள் கடந்த காலங்களில் நடந்தவற்றைப் பின்னணியாகக் கொண்டிருந்தாலும் இவை எல்லாம் தம் கால நிகழ்ச்சிகளாகவே இறைவாக்கினர் எடுத்துக் கொள்கின்றார் மேலும் மக்களைக் கொடுமைப்படுத்தும் எதிரிகளிடமிருந்து 'அபிசேகம் செய்யப்பட்டவரையும். மக்களையும் மீட்க இறைவன் புறப்படுகின்றார்' எனவே 'அமைதியாகக் காத்திருப்பேன்' என்று கூறி இறைவனில் அமைதி அடைகின்றார். இது அவரின் ஆழ்ந்த விசுவாசத்தைக் காட்டுகிறது

பல்வேறுபட்ட துன்பங்கள் வந்தபோதிலும் இறைவாக்கினர் இறைவனில் மகிழ்கின்றார். "அத்திமரங்கள் பூக்காவிட்டாலும், திராட்சைக் கொடிகளில் பழமில்லாவிட்டாலும், ஒலிவ மரங்களில் பலன் அற்றுப்போயினும், வயல்களில் விளைச்சல் கிடைக்கா விட்டாலும், கிடையில் ஆடுகள் இல்லாமற் போனாலும், தொழுவங்களில் மாடுகள் இல்லாதிருந்தாலும், நான் ஆண்டவரில் அக்களிப்பேன், என்மீட்பரான கடவுளில் அகமகிழ்வேன்" என்கிறார்

இறைவாக்கினரிடம் காணப்பட்ட இத்தகைய ஆழ்ந்த விசுவாசமும், ஆண்டவரில் அகமகிழ்தலும் எம் வாழ்விலும் இடம் பெற வேண்டுவோமாக.

—கி. சா. பங்கிராஸ்

அறிந்துகொள்ளுங்கள் 80

## எண்ணாகமம்

திருமறை நூலில் நான்காம் நூல் எண்ணாகமம் இந்நூல் எபிரேயத்தில் "பாலைவனத்தில்" என்று பொருள்படும் தொடக்க வார்த்தையை தலைப்பாகக் கொண்டுள்ளது எழுபதின்மர் நூல் இந்நூலை "கணித்தல்" அல்லது "எண்ணுதல்" என்ற பொருள் உடைய பெயரால் அழைக்கின்றனர். தமிழில் "எண்ணாகமம்" என்று அழைக்கிறோம்.

இந்நூல் எண்ணிக்கைக்கு முக்கியம் தருகிறது. பல நிகழ்ச்சிகளில் பல பொருட்கள் எண்ணப்படுகின்றன. இஸ்ராயேலரின் பாலைவனப் பயணத்தின்போது பகைவர்களது எதிர்ப்பு எப்பொழுதும் இருந்து கொண்டே இருந்தது. எனவே போராடக்கூடிய படைவீரரின் எண்ணிக்கையும் ஒரு வகையான படை அமைப்பும் தேவையாயிருந்தது. (எண் 1:1-54) இஸ்ராயேல் மக்களின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படுகிறது. பலிப்பொருட்கள், சுத்திகரத்துக்குரிய நாட்கள், லேவியருடைய நகரப்பகுதிகள் பிரித்துக் கொடுத்தல் ஆகியவைபற்றி வரையறுத்துக் கூறுவதில் இந்நூல் அக்கறை காட்டுகிறது.

இந்நூல் பாலைவனத்தில் 40 ஆண்டுகள் அலைந்துதிரிந்த பெரும் பகுதிகளைக் கூறுகிறது. எகிப்திலிருந்து அடைந்த விடுதலையையும் கானானில் குடியேறியதையும் இணைக்கும் நூலாகும்.

இந்நூல் பல பாரம்பரியங்களின் தொகுப்பாகும். யாவே, ஏலோயீம், குரு பாரம்பரியங்கள் காணப்படுகின்றன. சட்ட நூலின் (தோரா) மற்ற நூல்களைப் போல் இந்நூலையும் மோயீசன்தான் எழுதினார் என்று கூறப்படுகிறது. ஆனால் மோயீசன் முழுவதையும் எழுதவில்லை. மோயீசன் மனப் போக்குப்படி எழுதப்பட்ட நூல் இது. மோயீசனின் அதிகாரம் பெற்றது என்றும் சில பகுதிகளை மோயீசனே எழுதினார் என்றும் கூறுகின்றனர்.

எண்ணாகமம் இஸ்ராயேல் வரலாற்றின் பல்வேறு காலங்களிலிருந்து எடுக்கப்பட்ட செய்திகளைக் கொண்ட தொகுப்பு. மோயீசன் திருச்சட்டம் அளித்தவர். எனவே திருச்சட்ட நூலாகிய தோராவுக்கு மோயீசனே ஆசிரியராக அழைக்கப்பட்டார். எனவேதான் எண்ணாகமத்திற்கும் மோயீசன் ஆசிரியராகிறார்.

இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசகர்களே!

உண்மையைச் சொல்- நன்மையைச் செய். உன் வாழ்வில் தோல்வி கிடையாது என்று கூறிய நமது முன்னோர்களின் அறிவுரைப்படி என் மனதிற்குப்பட்டதை உண்மையுடனும் நீதியுடனும் இதுவரை சொல்லி வருகின்றேன் "நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று கூறிய நக்கீரன் போல நான் விடும் சொற்பிழைகள், பொருட்பிழைகளை சுட்டிக்காட்ட- தட்டிக்கேட்க வாசகர்களாகிய உங்களுக்கு உரிமையுண்டு!

அன்பர்களே! நம் முன்னோர்கள் தங்கள் முதுமொழியிலே ஆற அமர சிந்தித்து ஒரு பொன்மொழியை உதிர்க்கின்றார்

"வினை விதைத்தவன்- வினை அறுப்பான்" என்று இது நானும் நீங்களும்- எமது இனமும்- ஏன்? எமது நாடும் இன்று ஆழமாகச் சிந்திக்க வேண்டியதொன்று. நீங்கள் அறிவிலிகள். அப்பம் என்பதை நான் உங்களுக்கு பிட்டுக் காட்டி தெரியவேண்டாம் புரிவீர்கள் தானே?

திருநூல் ஆசிரியர் தன் இறை அனுபவத்தில் இப்படிக் கூறுகின்றார்.

"தீயவன் எப்போதும் சண்டையைத் தேடுகிறான். அவனுக்கு விரோதமாய்க் கொடிய தூதன் அனுப்பப்படுவான்" என்று 17/11 இல் தெளிவுபடுத்துகிறார்.

வாசகர்களே! தமிழ் மக்கள் எம் மதத்தினராக இருந்தாலும் அவர்களால் போற்றிப் புகழப்படுகின்ற ஒரே நூல் 'திருக்குறள்' என்பது நீங்கள் அறிந்ததே. காரணம் நமது பழமொழியாகம ஆசிரியர் ஒரு வசனத்தில் ஓராயிரம் அர்த்தங்களை கற்பிப்பதுபோல திருவள்ளுவரும் இருவரிகளில் இணையற்ற தத்துவங்களைப் புகுத்தி நிற்கின்றார். உதாரணத்திற்கு ஒன்று-

"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்- உய்வில்லை.
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற ஆழமான குறளுக்கு தத்துவஞானியும் சத்திய போதகனுமான திருநூல் ஆசிரியர் கூறும பதில் இப்படி.

"நன்மைக்குத் தீமை செய்கிறவன் வீட்டினின்று தீமை ஒருபோதும் ஒழியாது" என்று 17/13 இல் இடித்துரைக்கின்றார்.

திருநூலும் நம் முன்னோர் முதுமொழிகளும் எப்படி ஒத்துப்போகின்றது? "வார்த்தையின் வித்துக்கள்" திருநூலில் மட்டுமல்ல, தமிழ் பழமொழிகளிலும் சிதறிக் கிடக்கின்றது கவனிக்கின்றீர்கள் தானே.

### வாரம் ஒரு சிந்தனை

"உன்னை பரிசோதித்து பார்க்கும் உரைகல்— உனது மனச்சாட்சியே"

அன்புடன்

ஜெ. ஏ. நாதன்

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 3<br>சுடர்: 2 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

### வாரம் ஒரு வார்த்தை

கடவுளின் அரசு பேச்சில் அன்று
வல்லமையில்தான் இருக்கிறது. 1 கொரி. 4: 20.

### "திருக்குறளும் விவிலியமும்"

போட்டி 2

சரியான விடையைத் தெரிவு செய்து தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள்

1) தன்னைத் தவிர உள்ள யாவையும் உண்டாக்கியவர்... சிருட்டிகர்/விஞ்ஞானி
2) மனிதனுடைய உலக வாழ்வின் முடிவில் கிடைப்பது... வீடு சுடுகாடு.
3) அறிவு வருவது...கல்வியால்/பணத்தால்.
4) படைப்புகளின்மூலம் படைத்தவரின் இதை அறியலாம்... திறமையை/பண்பை.
5) கடவுளை அடைவதே கண்டுகளிப்பதே இதுவாகும்... இந்திரலோகம்/நித்திய பாக்கியம்.
6) ஆசையே இதற்குக் காரணம்......துன்பம்/போர்.
7) தாள் என்பது...கடதாசி/அபயம்.
8) நான், என்னால், எனது எனும் அகந்தை இதுவாகும்... பொய்யொழுக்கம்/பெருமை.
9) கவலையின் காரணம் கழிந்தால் வருவது...... நிறையமதி/புகழ்.

படிக்கவேண்டிய பகுதி: பக்கம் 1 லிருந்து 15 வரை.
போட்டி முடிவு: 30-6-89. பரிசு: ரூ. 25.
விடையுடன் பெயர், விலாசம், அங்கத்துவ எண் தவறாது குறிப்பிட வேண்டும்.

* * *

### தாவீதடிகள் துளிர்க்கதை:

(சென்றசுடர் தொடர்ச்சி)

### இயங்க மறுத்த இதயம்

"அப்பா! என்ன அப்பா?" என்றேன். அவ்வேளை அம்மா குத்தரிசிக் கஞ்சியுடன் அறைக்குள் வந்தார். "இந்தாரும் இந்தக் கஞ்சியைக் குடித்துப் பசியைப் போக்கும், மிஞ்சிவிட்டால் இந்தப் பஞ்சுவிடம் கொடும்" என்று கூறிவிட்டு அம்மா சென்றுவிட்டார். அப்பா; அம்மாவின் பேச்சைக் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. அவர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார், திடீரென கதிரையில் இருந்து முழித்தார். "மகளே" அவர் குரலில் மாற்றம் தெரிந்தது 'உணவுக்காக ஏங்காத இதயம்; உடைக்காக ஏங்காத இதயம்; அன்புக்காக வாழ்ந்த இதயம்; கல்விக்காக உழைத்த இதயம்; ஈழ மக்களின் இன ஒற்றுமைக்காகத் துடித்த இதயம்; இறையுணர்வும் தமிழுணர்வும் நிறைந்த இதயம்; இன்று எங்கே? அதன் துடிப்பு எங்கே? ஏன் அந்த இதயம் இயங்க மறுத்தது?" என்று ஆவேசமாகச் சத்தமிட்டுப் பேசியவர் கதிரையில் வந்து தொப்பென இருந்தார். சிறிது நேரத்தில் கதிரையில் இருந்தபடியே கண்ணயர்ந்தார்.

அப்பாவின் ஆவேசமான அந்தப் பேச்சு என் இதயத்தை "தாவீதடிகள், தாவீதடிகள், தாவீதடிகள்," என்று இயங்கச் செய்தது. ஏன்? உங்கள் இதயம் கூட இப்பொழுது அப்படித்தானே ஒலிக்கிறது.

### அங்கத்துவம்

165. ம. மலர் நிதி ஆண்டு 10.
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்.
166. றெக்ஸ் மனுவல் மத்தேயு ஆண்டு 9.
சென். தோமஸ் றோ. க. பெ, பா. பருத்தித்துறை.
167. சூ. ஏ. போல் றஜனி ஆண்டு 11.
சென். தோமஸ் றோ. க. பெ. பா. பருத்தித்துறை.
168. பப்றிஸ் ரமேஸ் ஆண்டு 6.
மன். / புனித சவேரியார் ஆ. ம, ம. வி.
169. யோ. யூலியற் றுஜினி ஆண்டு 9.
மன் / நானாட்டான் ம. வி.
170. யோ. யூட் அன்ரன் ஆண்டு 6.
மன் / நானாட்டான் ம. வி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகம குறுக்கெழுத்துப் போட்டி இல. 12

(யாபு ஆகமம் அதி. 20 இல் இருந்து)

விடைகளை அனுப்பவேண்டிய இறுதி நாள் 5-7-1989

(அடுத்த போட்டி 14-7-89)



மேல் இருந்து கீழ்
1. தூயமையற்றவையே!
2. இதற்குக் கேட்பார் கள்ளா?
3. எதற்கு தலைபணிய வேண்டும்! தலைகீழாக வுள்ளது.
4. நிர பிறர். (குழம்பி)

இடமிருந்து வலம்
2. நீதுக்கு இல்லை.
5. உயிரினம்
6. நிறைந்தவர்
7. சினங்கொண்டவன் எக்குலத்தானே வளம் மாறியுள்ளான்.
8. இளையவர் இப்படிப்பட்டவர்
9. எல்லாம் வல்லவரிடம் இல்லை.

பரிசு ரூபா 25/-

பாராட்டுப் பெறுவோர்:

பி. ஆனந்த ஜோதி, எ. அன்ரன் மதுரநாயகம், அ. லூசியா கிறேஷ், அ. மியூரன் றூபி, பாலதாஸ் பிரான்சிஸ், தனம் அல்போன்ஸ், உதயன் அந்தோனிப்பிள்ளை, றீற்று அந்தோனி முத்து, அ. வில்டா மேரி சிராய்வா, A. கில்டா சிராய்வா, வனஜா அந்தோனிப்பிள்ளை, எ. அன்ரன் மதுரநாயகம், அ. ஓணோறியஸ் சிராய்வா, அ. றெமிஜியஸ் சிராய்வா, சசிகலா தாவீதுப்பிள்ளை, தாரணி தாவீதுப்பிள்ளை, டொடா றிச்சாட், சே. மரியதாஸ் குலாஸ், சே செல்வராணி குலாஸ், சே. டயனு குலாஸ், சே. செல்வஜோதி குலாஸ், ம. அன்ரன் பெனிக்கிம்றுசியன், ம. நேசமலர், எற்வட் மொறின் சிறிஸ் ரெல்லா, ஜே. கீதாஞ்சலி சோசை, ஜே. அகிலன் சொய்சா, ஜே. மெட்டானு தீபா சோசை, ம. ராஜன் குலாஸ், அ. பிலிப்ஸ் விஜயரத்தினம், ச. யேசுதாசன், ச. பிறன்ஸ்லி, ஜோ. ஜெயபபிரகாஷ், ச. பியூலா, லெ. றீகன சோசை, லெ. றூபன சோசை, ச. பிரபாகரன், செ. மேரியோசவின் லதா, ய. பேர்ணடேற ரதி, அபான வந்துரா அல்பேட், ம. கிறிஸ்ரியன பெனுணடா, S. V. பொனகலன், சூ. போல் றஜனி, அ. லூக் குரூஸ், A. அன்ரனல லம்பேட், P. விகினி சோலைச, யோ. நளினி மார்க், பெனிகனு அருணகுமாரி செல்லையா, தருமதி. நாதன், மரீனு சததியா ஆசீர்வாதம், இராஜரெட்ணம றஜினகாந், அ. இன்பராஜ் லெமபேட், ம. நிலோஜனு, அந்தோனிபள்ள டொறால, ம. மரியாமபிள்ளை, ம. சாமினா, ம. ஜெயந்திரல, அ. சாந்தனி ம. மேரி விறசிற்று, மரியாமபிள்ளை மோ ரஞ்சினி, எ. ஜெயராஜ் குலாஸ், யோ. லிவன்ரன மாக், யோ. கலயாணி மார்க், சுதா டேவிட், செ. வசந்தகுமார், பமேலா பதநாதர், P. L. பிறேமரூஜ் துரைராசா, நீக்கிலான பிரானசிஸகம்மா, S. ஜெனனுவா, S. கறிஸரின அருளதவராஜ், அனரன லயோ, செ. றஜிக் குமார், லூ. வெனனசியா மகி, ச. மேரி கிறிஸ்ரீனு, இ. எமல் யோசவ், இ. எறிக் யோசவ், இ. கொண்சால்வேஸ், ம. பாஸ்கரன, ய. அனரன யோசவ், நிர்மலா அந்தோனிப் பிள்ளை, நிகலொலினு, சுகந்தி துரைசிஙகம, எஸ். பேரின்பராணி, எ. எமல யோன்சன, செலஸ்ரீன ஜெனிற்று வினி, டொறின காமலிறரு பாலசேகரம, பி மிரியாம் யாழினி, தே. ஜெனோர்ததனி குலாஸ், தே ஜெனிபர் குலாஸ், தே. ஜெகதீஸ்வரன் குலாஸ், P. யோவான், தே. ஜெயதர்ஷினி குலாஸ்.

பரிசுபெறும அதிஷ்டசாலி:-

செல்வி. பமெலா பத்திநாதர், 450/3 இடம, மொறட்டுவா.

குறுக்கெழுத்துப்போட்டி 10இன் சரியான விடைகள்

இடமிருந்து வலம
1. நாற்புறக்காற்று 2. தோல்வியடைந்து
3. காடசியனுல 5. எலும்பு வால்
7. தெலைவவனின் 8. கவழ்ந்து போகாமல்
10. ஆடசியாணடில் 11. வெள்ளாட்டுக் கடாவும்

வலம இருந்து இடம
4. பபலா 6. கடுஞ்சினத்தின்
9. அறங்கூறவையம்

மேலிருந்து கீழ்
(1) நான்காம் மிருகம் (4) பக்கங்களையும்

குறுக்கெழுத்துப் போட்டி 11 இன் சரியான விடைகள்

இடமிருந்து வலம்:-
1. அலைபுறுகிறவனுக்கு 4. கண் 13. நாணல்
15. சாத்தான (வ. மா) 16. திக்கற்றவர்
17. உறுதி

தனியன:-
10. பூ

மேல் இருந்து கீழ்:-
2. புண 3. வழிகள் 4. கல்லறை
5. ஆத்திரம் 6. மேற்குநாடு 7. கடவுளின் நீதி
8. பாலதாத் 9. சாமபலே (த. கீ) 10. உணவு
11. பொல்லாதவன் 12. மாசற்றவர்
14. தவிர்களை (குழம்பி)



# வாசகர் கருத்து



வாரமொருமுறை வெளியாகும் பாதுகாவலனே உனது சேவை எத்தனை பெரியது. குடும்பம் ஒரு கதம்பம், சிறுகதை, இளைஞர் உலகம், உங்களுக்குத் தெரியுமா? மற்றும் போட்டி நிகழ்ச்சிகள் அனைத்தும் வரவேற்கப்படுகின்றன. இதழ்15-ல் வெளியான "சொந்தம் நூல்வேலி" என்ற சிறுகதை வெகுஜோர். அதை எழுதிய றேகான் அன்ரனிக்கு எனது பாராட்டுக்கள்.

—ச. பிரபாகரன்
முதலைகுத்தி, உயிலங்குளம்.

★

பாதுகாவலன் வார இதழ் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முழுமையான கத்தோலிக்கனை உருவாக்குவதை உணருகின்றேன். தீயவர்களாகிய ஓநாய்களின் வழியில் எம் மந்தையின் ஆடுகள் வழிதவறி, நெறிதவறிச் சென்று பலியாகாமல் தேவ அன்னையின் புகழ் ஓங்கும் முகமாக ஆக்கங்களை அளித்து பாதுகாக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன். ஜீவா போல் அ.ம.தி. அவர்களின் ஆக்கங்களும், எஸ். ஏ. நாதரின் ஆக்கமும், அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளையின் ஆக்கமும் மிகவும் பயன்தரத் தக்கதாய் அமைந்துள்ளன.

முகவரி: செல்வி
த. ஜெனிவி பெர்னாண்டோ
சின்னக்கடை, மன்னார்.

பாதுகாவலனைப் படித்துச் சுவைக்கும் பலகோடி வாசகர்களில் யானும் ஒருவன். ஏனைய நாளிதழ்களைவிட முற்றிலும் மாறுபட்ட வகையில், முழுக்க, முழுக்க, எம தாய் திருச்சபையின் முக்கிய பொருள் பொதிந்த செய்திகளையும், தத்துவக் கருத்துக்கள், தொடர்கட்டுரைகள், கவிதைகள் போன்ற பலதரப்பட்ட விடயங்களை மிகவும் சுருக்கமாக, அதுவும் தெளிவாக, அழகு தமிழில், எளிய நடையில, எல்லா இன மதத்தினர்களும், இலகுவில் புரிந்துகொள்ளும் வகையில், தம் அரிய பெரிய பங்கைப் பாதுகாவலன்" ஆற்றிவருவது கண்டு அளவில்லா மகிழ்ச்சி அடைகின்றன். 'கலைநிலா' பகுதி புலவர் நீ. மரியசேவியரின் ஆணித்தரமான அசல் கருத்துக்களை அழகுற விளக்குகின்றது. அருட் தந்தை ஜீவா போல் எழுதிவரும் 'தேனருவி' கறைபடிந்த இதயங்களுக்கு கனியமுதாய் இனிமை தருகின்றது.


அயலவர்களுக்கும் இக்காவலன் பத்திரிகையை அறிமுகம் செய்து இதன் வளர்ச்சிக்கு எம்மாலான முயற்சி செய்வோம்.

வளர்க பாதுகாவலன்
பெருகுக அதன் வாசகர்

யோசப் - செபமாலை
வலையன்மடம்.

---

## விண்ணக வாழ்வின் 31-ம் நாள்



சலமோன் லோறன்ஸ்

பிறப்பு: 17-10-1923 இறப்பு: 13-05-1989

மாதமொன்று மறைந்தாலும் உம் அன்பு முகம் மறையவில்லை

அன்புடன் எங்களை அரவணைத்து வளர்த்த தந்தையே! பாசத்தின் இருப்பிடமே எம்மை விட்டு நீர் பிரிந்து ஒரு மாதம் சென்றாலும் உம் நினைவுகள் எங்கள் நெஞ்சத்தை விட்டகலா. எங்கள் மீது உமது அன்பையும் பாசத்தையும் பொழிந்து எங்களை நல்வழிப் படுத்தி நல்ல நிலையில் வைத்து விட்டு எம்மைப் பிரிந்து சென்றீரே இதை எண்ணி எண்ணி கலங்குகிறோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் 18-6-89 காலை 6-30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
4-ம் வட்டாரம்
மண்டைதீவு A/121

---

## விண்ணக வாழ்வின் பத்தாம் வருடம்

ஸ்ரீபன் சொக்கலிங்கம்

மண்ணில்: 02-09-1911 விண்ணகத்தில்: 14-06-1979

அன்புத் தலைவா!
அரிய நற்தந்தாய்
ஆருத்துயரில் அழுது
புலம்புகின்றோம
எம்முடன் வாழ்ந்த
இனிய நற்காலங்கள்
பண்புடன் பகிர்ந்த
பல்வகைச் சேவைகள்
அருளோடுரைத்த அரிய
நல் மொழிகள்
அனைத்தும் இழந்து
ஆண்டுகள பத்தாகியதோ.

14-06-1989 புதன்கிழமை காலை 6-30 மணிக்கு பாண்டியன்தாழ்வு புனித. அன்னாள் ஆலயததில் அன்னாரது ஆத்தும சாந்திக்காக ஒப்புக் கொடுக்கும் இரங்கற் பலியில பங்கு கொண்டு செபிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்,

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## புனித சவேரியார் விழா

சவேரியார்புரம்

சிலாவத்துறை—19-06-1989

13-06-89—கொடியேற்றம், வழிபாடு. மாலை 5-00 மணி.
14-17-06-89—மாலை 5-30 மணி வழிபாடுகள்.
18-06-89—நற்கருணை வழிபாடு, பவனி.
19-06-89—திருவிழாத் திருப்பலி, பவனி.

"யாரேனும் தாகமாயிருந்தால் என்னிடம் வரட்டும். என்னில் விசுவாசம் கொள்பவன் குடிக்கட்டும்."
(அரு. 7: 37.)

A/118. பங்குத் தந்தை.

---

## புனித அந்தோனியார் திருவிழா


ஊறணி, காங்கேசந்துறை

ஆனி 11-ம் திகதி மாலை 4-30 செபமாலை, திருச்சுருப பவனி, மாலை திருப்பலி.
ஆனி 12-ம் திகதி 4-30 செபமாலை நற்கருணை வழிபாடு.
ஆனி 13-ம் திகதி காலை 7-00 திருவிழா, திருப்பலி.

A/125 பங்குத் தந்தை.

---

## 31-ம் நாள் நினைவு



பீ. செல்வநாயகம்
யோசேப்

மலர்வு: 7-12-1912
உதிர்வு: 13-5-1989

'சீவியத்தில்
நேசித்தவர்களே
மரணத்திலும்
மறவாதீர்கள்."

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இரங்கல் திருப்பலி நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் 12-6-89 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
நாவாந்துறை A/124

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

## மன்னர் மாதர் ஒன்றியத்தின் கண்காட்சியும் விற்பனையும்

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட கிராம மாதர் சங்கங்களின் உற்பத்திப்பொருட்கள் கண்காட்சியும், விற்பனையும் கடந்த 22.05.89 திங்கட்கிழமை புனித செபஸ்தியார் பேராலயத்தில் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது.

இதில் மன்னார் பட்டினம், தாராபுரம், பேசாலை எழுத்தூர், பெரியபண்டிவிரிச்சான், திருக்கேதீஸ்வரம், கரிசல் நானாட்டான், சாவற்கட்டு, கூராய், உப்பளம், பனங்கட்டிக்கொட்டு, பட்டித்தோட்டம் போன்ற கிராமங்களில் உள்ள மாதர் சங்கங்கள் தமது விவசாய, கடற்றொழில், குடிசைக் கைத்தொழில் பொருட்களை பார்வைக்கு வைத்துப் பங்குபற்றிச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

அடுத்த பொருட்காட்சியும் விற்பனையும் இதே இடத்தில் எதிர்வரும் 18.06.89 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறும். இதில் மேலும் பல கிராமிய மாதர் சங்கங்கள் பங்குபற்றும் என இவ் ஒன்றியம் எதிர்பார்க்கின்றது.

இம் மாதர் ஒன்றியத்தின் முதலாவது பொதுக்கூட்டம் மேமாதம் 28ஆந் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றதென ஒன்றியத்தின் தலைவி திருமதி. றெஜினா இராமலிங்கம் அவர்கள் தமது நன்றி உரையில் கூறினார்.

துயர் துடைப்புச்சங்கத்தின் ஆதரவில் இம் மாதர் ஒன்றியம் குறுகிய காலத்தில் பல பணிகளை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## செபமாலைத் தியானம்

உயிலங்குளப் பங்கில் உள்ள பாலைக்குளி காத்தான்குள காணிக்கை மாதா ஆலயத்தில் திருச்செபமாலை மாதத்தை முன்னிட்டு ஒவ்வொரு நாளும் பாலைக்குளி, காத்தான்குளப் பெண்கள் யாவரும் ஒன்றாகக் கூடி செபமாலை செபித்துத் தியானித்தனர். 28-5-89 அன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப மூன்று மணிமுதல் ஐந்து மணிவரை உயிலங்குளப் பங்குத்தந்தை அருள்திரு. ஸ்ரனி அன்ரனி அவர்கள் தாய்மாருக்கு 'மரியாளின் அன்பு வாழ்க்கை' என்ற கருத்தரங்கு ஒன்றை நடாத்தினார். இக்கருத்தரங்கிற்கு எல்லாத்தாய்மாரும் சமூகமளித்தனர். இதனைத்தொடர்ந்து இரண்டுநாட்கள் செபமாலைத்தியானத்துடன் 31-5-89 அன்று காலை 7 மணியளவில் மரியாள் எலிசபேத் அம்மாளை சந்தித்த திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய தினத்திலே தாய்மாரும் தமது திருநாளை மிகவும் விமரிசையாகக் கொண்டாடினர். தாய்மார் அனைவரும் காணிக்கைப் பவனியில் பங்குபற்றி தம்மை தேவ தாய்க்கு அர்ப்பணம் செய்தனர், காலை 8-15 அளவில் திருநாள் திருப்பலி இனிதே முடிவுற்றது.

தகவல்:- A. சுதா
பாலைக்குளி

## இசைத் தென்றல்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறு ஒரு கலைஞன் ஊக்குவிக்கப்பட்டால் தான் அவன் தான் வாழும் சமுதாயத்திற்கு இன்னும் சிறந்த பணிகளை ஆற்றமுடியும். எனக்குப் பின்னரும் பல கலைஞர்களை திருமறைக்கலாமன்றம் கௌரவிக்க திட்டமிட்டுள்ளதை அறிந்து நான் பெருமைப்படுகிறேன், இது தனி மனிதனுக்கல்ல, கலை உலகிற்கே செய்யும் மகத்தான பணியென்பது என்னுடைய கருத்து. (தொடரும்)

## உரோமில் பிக்குமார்

சமாதான யாத்திரையை மேற்கொண்ட பிக்குமார் சிலர் இலங்கையிலிருந்து வத்திக்கான் சென்றிருந்தனர். மே மாதம் 17 ஆம் திகதி புதன்கிழமை புனித இராயப்பர் சதுக்கத்தில் திருத்தந்தை மக்களுக்கு அருளுரை வழங்குகையில் இலங்கையிலிருந்து வந்திருந்த பிக்குமாருக்கும் விசேட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். கொட்டும் மழையில் திரளான மக்கள் இச்சந்திப்பில் பங்குகொண்டனர்.

## அடுத்த இதழில்

ஆறு புதிய குருக்கள் திருநிலைப்படுத்தப்படும் தினத்தை முன்னிட்டு எமது அடுத்த இதழில் புனித சவேரியார் குருத்துவக்கல்லூரியின் சிறப்பு ஆக்கங்கள் வெளிவரும்.

# கிறிஸ்தவ மக்களின் பக்தி முயற்சிகளில் நற்கருணைப் பக்தி முயற்சியே தலைசிறந்தது

நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 28-05-89 அன்று கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை வணக்கத்துக்குரிய பிதா போல் நட்சத்திரம் அடிகளாராலும், நானாட்டான் வாழ் பங்கு மக்களாலும் புனருத்தாரணம் செய்து வைக்கப்பட்ட ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரும் பங்குத்தந்தையும்இணைந்துகூட்டுத்திருப்பலி நிறைவேற்றினார்கள். ஆயர் அவர்கள்கிறிஸ்துவின்திருஉடல்திருஇரத்தத்தில் பொதிந்துகிடக்கும் மறையுண்மைகளை தெளிவாக எடுத்துரைத்தார். இன்னும் கிறிஸ்தவ மக்களின் பக்தி முயற்சிகளில் நற்கருணைப்பக்தியேதலைசிறந்த பக்தி எனவும், நற்கருணை ஒருமைப் பாட்டின் சின்னமாக காணப்படுகின்றது எனவும், நற்கருணை உட்கொள்வதன் மூலம் முழுநிறைவை அடைய முடியும் எனவும் எடுத்துரைத்தார். நானாட்டான் மகாவித்தியாலய உப அதிபரும், ஆரோக்கிய அன்னை ஆலயபாடகர் குழாமின் பொறுப்பாளருமான ஆசிரியர் திரு. அ. பத்திநாதன் குரூஸ் அவர்களால் நன்றி உரையாற்றப்பட்டது. பங்குத்தந்தை வணக்கத்துக்குரிய பிதா போல் நட்சத்திரம் (அ. ம. தி) அடிகளார் அன்னையின் புனருத்தாரணத்திற்கு பொருளுதவி, பணஉதவி, சரீரஉதவிபோன்றவற்றை தந்துதவிய அனைத்து மக்களுக்கும்தனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஊற்றெடுத்த நன்றிப்பெருக்கை வாரி இறைத்தார்.

தகவல்:-
பற்றீசியா யோண்பிள்ளை
நானாட்டான்.

## உலகின் செல்வந்த...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜூன் 2ஆம் திகதி நோர்வேயிலுள்ள ஒஸ்லோவில் 10,000 மக்கள் முன் திருப்பலி ஆற்றிய திருத்தந்தையிடம் ஒஸ்லோ லூத்தரன் திருச்சபை ஆயர் அன்றேயஸ் "கத்தோலிக்க திருச்சபை, லூத்தரன் திருச்சபையைத் தமக்குச் சமமானவர்கள் என ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உலகின் செல்வம்மிக்க நாடுகளான ஸ்கன்டிநேவிய நாடுகள் "ஒழுக்கக் கேட்டின் ஆய்வு கூடம்" என வர்ணிக்கப்படுகின்றன. சமூகசேவை, மனித உரிமைக்கு தாம் முக்கியத்துவம் கொடுப்பதால் தரம் உயர்ந்தநாடுகள் எது என்பதை கண்டுகொள்ள திருத்தந்தையின் பயணம் உதவும் என இந்நாடுகளின் ஆயர் மன்றத் தலைவர் போல் வேர்சுரேன் கூறியுள்ளார்.

அதிகப்படியான வாக்குகளைக்கொண்டு தீர்மானத்தை மேற்கொள்ளும் பாராளுமன்ற முறைக்கு கி. பி. 930இல் வித்திட்ட ஐஸ்லாந்து 1000ஆம் ஆண்டில் நாட்டு மக்கள் கிறிஸ்தவத்தை தழுவவேண்டுமென பாராளுமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றியது.

இப்போது ஒரு சத விகிதத்திலும் குறைந்த கத்தோலிக்கர் வாழும் இந்நாடுகளில் 16ஆம் நூற்றாண்டில் புரொட்டஸ்தாந்து மறுமலர்ச்சியின் காரணமாக கத்தோலிக்கம் நசுக்கப்பட்டது. 2ஆம் உலக யுத்தம்வரை கத்தோலிக்கர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டிருந்தது.

## யாழ். மறைவட்டத்திற்கு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடித்தார். இவர் மின்சாரப் பொறியியல் நிறுவனமொன்றில் இலிகிதராக மூன்று ஆண்டுகள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை கிறிஸ்துவின் அழைப்பைப் பெற்று 1981ஆம் ஆண்டு தை மாதம் 7-ம் திகதி யாழ் புனித மடுத்தினார் சிறிய குருமடம் சென்றார். அதே ஆண்டு கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடம் சென்று தமது மெய்யியல், இறையியற் கல்வியைக் கற்றார்.

(2) சகோ. பெனற்

மண்டைதீவைச் சேர்ந்த திரு. T. A. பெணண்டோ, (இளைப்பாறிய இலிகிதர் சம்பத்திரிசியார் கல்லூரி) ஆகத்தம்மா தம்பதிகளின் செல்வப் புத்திரராவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மண்டைதீவு றோ. க. பாடசாலையில் பயின்றார். பின்பு கல்வியை சம்பத்திரிசியார் கல்லூரியில் தொடரும்போது, இறைவனின் அழைப்பை உணர்ந்து புனித மடுத்தினார் குருமடத்தில் சேர்ந்து பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொண்டார், குருத்துவக் கல்வியையும், பயிற்சியையும் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் பெற்றார்.

(3) சகோ. இயூஜின் பிரான்சிஸ்

யாழ். மரியாள் பேராலயத்தைச் சேர்ந்தவரும் குருநகரைப் பிறப்பிடமாகக்கொண்டவருமான இவர் காலஞ்சென்ற திரு. மனவல் சவிரியான், திருமதி மேரிமெக்டலீன் ஆகியோரின் செல்வப் புத்திரராவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை புனித. யாகப்பர் மகா வித்தியாலயத்தில்கற்றார். தொடர்ந்து புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தபோது இறை அழைப்பின் குரல் கேட்டு புனித மடுத்தினார் குருமனையிற் பயிற்சி பெற்றார். பின்னர் புனித சவேரியார்குருமடத்தில் மெய்யியல், இறையியல் கல்வியைக் கற்றார்.

(4) சகோ. கு. யேசுதாஸ்
அன்ரனி பாலா

இவர் காலஞ்சென்ற திரு. குரூஸ், காலஞ்சென்ற திருமதி நட்சேத்திரம் ஆகியோரின் அன்புப் புதல்வராவார். இவர் ஊறணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் ஆரம்பக் கல்வியை காங்கேசன்துறை றோ. க. பாடசாலை, நடேஸ்வராக் கல்லூரியிலும் உயர்கல்வியை இளவாலைபுனித. கென்றி அரசர் கல்லூரியிலும் கற்றார். இவர் இறைவனின் அழைப்பை ஏற்று புனித மடுத்தினார் குருமடத்தில் சிறிய குருமடப் பயிற்சியைப்பெற்றார். பின்னர், புனித சவேரியார் குருமனையில் குருத்துவக் கல்வியைக் கற்றார்.

(5) சகோ. து. அன்ட்று
தவராஜசிங்கம்

இவர் வசாவிளான் உத்தரிய மாதா ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி துரைசிங்கம் ஆசிரியர்களுக்கு மகனாகப் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை வசாவிளான் றோ. க. பாடசாலையிலும், மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றார், பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரியில் தொடர்ந்து கல்வி கற்றார். 1977ம் ஆண்டு சிறிய குருமடப் பயிற்சியை புனித மடுத்தினார் குருமனையில் ஆரம்பித்த இவர்1981-ம் ஆண்டு புனித சவேரியார் குருமடத்தில் குருத்துவக்கல்வியைப் பெற்று இறைவனின் அழைப்புக்குச் செவிமடுத்தார்.

(6) சகோ. மனுவேற்பிள்ளை
டேவிட்

இவர் திரு. திருமதி மனுவேற்பிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்ராவார். உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக் கல்வியை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், இந்துக் கல்லூரியில் கற்றார். பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர்கல்வியைப் பெற்றார். இறைவனின் அழைப்பை ஏற்று புனித மடுத்தினார் குருமனை சென்ற இவர் தமது மெய்யியல் இறையியல் கல்வியை புனித சவேரியார்குருமனையில்கற்றார்.

## 41-வது பயணம்

ஏப்ரல் 28முதல் மே6 வரை திருத்தந்தை மடகஸ்கார், றேயூனியன், சம்பியா, மாலாவி ஆகிய நான்கு தென் ஆபிரிக்க நாடுகளுக்கு மேற்கொண்ட அப்போஸ்தலிக்க பயணம் திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பரின் 41 வது பயணம் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊக்குவிப்பு

இவ்வாரம் 6725 பாதுகாவலன் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. உங்கள் பங்கில் ஊக்குவிப்பு நடக்கின்றதா?

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு யூன் மாதம் 9ஆந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
பதிவு இல: QB / 1001/58/81

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org